விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 27 திங்கட்கிழமை (10.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 112

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## திருட்டுச் சம்பவங்களை ஒருபோதும் அனுமதியோம்

### யாழ்.மாவட்ட அரசியல்துறை அறிவிப்பு

(பளை)

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களை விடுதலைப்பு லிகள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள்.

இவ்வாறு யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

யாழ். குடாநாட்டு மக்களை உலுப்பி நிம் மதியற்ற ஒருவாழ்வை மேற்கொள்ளும் அளவிற்கு அண்மைக் காலத்தில் இடம்பெற்று வரும் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் உள்ளன.

எதிரிகளின் கொலை பயமுறுத்தல்களினால் குடாநாட்டு மக்கள் இரவு நேரங்களில் வீட்டுக்கு வெளியேவர அஞ்சிவாழும் சூழலைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்ட சில புல்லுருவிகளும் , திருடர்களும் துப்பாக்கி, கொட்டன்கள் ,வாள்கள், கத்திகள் கொண்டு மக்களை அச்சுறுத்தி திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் பற்றிய விபரங்கள் சில எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்களின் இச் செயற்பாட்டினையும் அச்சுறுத்தல்களையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

எனவே இவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் எமது கவனத்திற்கு அறியத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். இவ் வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## 2ம் சுற்றுப் பேச்சுக்கான சர்வகட்சி மாநாடு இன்று

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை தொடர்பில் ஆராயும் சர்வகட்சி மாநாடு இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ஊடக இணைப்புப் பிரிவின் பணிப்பாளர் சந்திரபால லியனகே தெரிவித்தார்.மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி யேற்ற பின்னர் சர்வகட்சி மாநாடு ஏற்கனவே இரண்டு தடவைகள் நடத்தப்பட்டுள்ளன.

இன்று நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டின்போது ஒவ்வொரு கட்சிகளிடம் இருந்தும் கருத்துக்களை கேட்டறியவுள்ளதாக சமாதான செயற்பாட்டு இணைப்புப்பிரிவின் அரச செயலகத்தின் தலைவர் கலாநிதி பாலித்த ஹொகன தெரிவித்தார்.எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை சுவிஸ்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-4)

# கடற்படையின் கப்பலிலேயே புலிகள் பயணிக்க வேண்டும்

## அரசின் அறிவிப்பு- தமிழ்ச்செல்வன் கண்டனம் நிலைமையை விளக்கி க.கா.குழுவிற்கு கடிதம்

## கிழக்கை தனியாகப் பிரிக்க புதிய அமைப்பு உருவாக்கம்

### சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அங்கம்

(கொழும்பு)

வடக்கில் இருந்து கிழக்கு மாகாணத்தைத் தனியாகப் பிரிக்க நடவடிக்கையெடுக்கவேண்டுமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இந் நடவடிக்கைக்காக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் வழிநடத்தலில் கிழக்கில் 'உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு' ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டது.

இவ் (12 ஆம் பக்கம் பார்க்க)



அரசின் கடற் படைக் கப்பலில்தான் புலிகளின் கிழக்குத் தளபதிகள் பயணம் செய்ய வேண்டுமென்ற அரசின் புதிய நிபந்தனை எமது தலைமைப் பீடத்தை மிகவும் ஆத்தி ரத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## •நோர்வே வெளியேறினால் யுத்தம் தான் வழி• அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் எச்சரிக்கை



இலங்கை இனப்பிரச்சினை அனுசரணைப் பணியில் இருந்து நோர்வே வெளி யேறினால் அது அது யுத்தத்திற்குத்தான் வழி வகுக்கும். இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பால சிங்கம் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டேலீடருக்கு அவர் அளித்த நேர்காணலில் நோர்வேயை வெளியேற்றக் கோரும் ஜே.வி.பியின் கோரிக்கையானது கேலிக்கூத்தான ,நியாயமற்ற ,சிறுபிள்ளைத்தனமான அரசியலை வெளிப்படுத்துகிறது.

அரசாங்கத்துடன் தமிழீழ விடுதலைப்புலி கள் உறுதியாக நேரடிப்பேச்சுக்களை நடத்த மாட்டார்கள். மூன்றாம் தரப்பினராகிய நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன்தான் பேச்சுக்கள் நடத்தப்படும்.

ஜே.வி.பி. அமைதியை எதிர்ப்பதன் மூலம் போரை விரும்புகிறது. தமிழர் தாயகத்தை இரா ணுவத்தின் மூலம் ஆக்கிரமிக்கின்ற ஆசை யை வெளிப்படுத்துவதுதான் நோர்வே எதிர்ப்பு இயக்கம் ஆகும், இத்தகைய கேலிக்கூத்தான சக்திகளுடன் இணைந்துள்ள ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷ அமைதி முயற்சிகளை எவ் வாறு முன்னெடுக்கப்போகிறார் என்பது தான் எங்களது பாரிய சந்தேகம்.

இனப்பிரச் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# சீரான மின்வலுக் கொள்கையை விரைவில் அமுல்படுத்த வேண்டும்

## மின்வலு எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

நாட்டுக்கு நீண்டகால அனுகூலங்களைப் பெற்றுத்தரக் கூடிய சீரான மின்வலுக் கொள்கையை தாமதமின்றி அமுல் செய்ய வேண்டிய காலம் கனிந்துள்ளதென மின்வலு எரிசக்தி அமைச்சர் டபிள்யூ. யூ.கே. செனிவிரட்ண தெரிவித்துள்ளார்.

நாட்டில் மின்சக்தி துறை சார்ந்த தேவைகள், வசதிகள் போன்றவை இன்னமும் சாரியாக இனம் காணப்படவில்லையெனவும் அமைச்சர் டபிள்யூ.டி.கே. செனிவிரட்ண கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற மின்வலுக் கொள்கைகள் மற்றும் மூல உபாயங்கள் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையிலேயே இனைத் தெரிவித்தார்.

இலங்கையின் மொத்த மின்சார வலைப்பின்னலில் 75 சதவீதமான மின்சாரம் தேசிய வலைப்பின்னலூடாகவே பெறப் படுகின்றது. எஞ்சிய 25 சதவீதம் ஏனைய மின் உற்பத்தி தோற்றுவாய்களிலிருந்து விலை கொடுத்து வாங்கப் படுகின்றது.

எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் போது பெருமளவு பணத்தை செலவிட நேர்கின்றது. இதனைத் தவிர்க்க வேண்டுமானால், சிறிய நீர் மின்வலு உற்பத்தி நிலையங்கள், அனல் மின் வலு உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தவேண்டுமென அமைச்சர் வலியுறுத்தினார்.

கடந்த ஒரு தசாப்த காலப் பகுதியில் இலங்கை மின் உற்பத்தி மற்றும் விநியோகத்துறைகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்கின்றன. இவ்வாறுநுரைச்சோலை, மேல் கொத்மலை மின் உற்பத்தி திட்டங்கள் மூலம் இவற்றை ஓரள வேனும் வெற்றிகரமாக சமாளிக்க முடியுமென மின்வலு எரிசக்தி அமைச்சர் மேலும்குறிப்பிட்டார். (க-7)

# ஜனாதிபதியின் கட்டளைகளின் பேரிலேயே இராணுவ உயரதிகாரிகளுக்கு இடமாற்றம்

இராணுவத்தில் திறமையுடைய சிரேஷ்ட அதிகாரி ஒருவரை கனிஷ்ட பதவிக்கு இடமாற்றம் செய்தமையால் மனமுடைந்து இராணுவத்திலிருந்து விலகிச் செல்வதற்காக அந்த இராணுவ அதிகாரி கடிதம் கையளித்த நிலையில் சிரேஷ்ட அதிகாரிகளை இடமாற்றுவது உட் பட அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதியின்கீழ்கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் காலங்களில் இராணுவத்தில் உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கான அதிகாரங்கள் இராணுவ தளபதிக்குக் கிடையாது. அவை ஜனாதிபதியின் கட்டளைகளின் பேரிலேயே நடைபெறும்.

இதுவரை சேவை தொடர்பாக மனமுடைந்த நிலையில் மேஜர் ஜெனரல் சந்திரவங்ஷ, பிரிகேடியர் ரொஹான் ஜயசிங்க, பிரிகேடியர் ரிஸ்வி செக்கி உட்பட பல திறமை மிக்க அதிகாரிகள் சேவையை கைவிட்டுச் செல்வதற்கான கடிதங்களை கையளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இராணுவத்தில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அண்மையில் மேற்கொண்ட இடமாற்றம் மற்றும் பதவி உயர்வுகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடைவிதித்துள்ளார்.

இது தொடர்பாக சரத் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்பாய ராஜபக்ஷ கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். இராணுவத்தில் மேற்கொள்ளப்படும் பதவி உயர்வு மற்றும் மற்றங்களை ஜனாதிபதி ஆலோசனையின்றி மேற்கொள்ளக்கூடாது என்றும் அக்கடிதத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் இராணுவத்தில் முறையற்ற வைகயில் பணி இடமாற்றம் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதாக சரத் பொன்சேகா மீது குற்றஞ்சாட்டப்பட் டது.

சரத்பொன்சேகாவின் நடவடிக்கையால் மூத்த இராணுவ அதிகாரிகள் பதவி விலிகியிருந்தனர். இதுதொடர்பிலும் சரத் பொன்சேகாவிடம் மஹிந்த ராஜபக்ஷ விளக்கம் கேட்டுள்ளதாக அலரிமாளிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

# நோர்வே வெளியேறாவிட்டால் போராட்டத்தை தொடருவோம்!

## ஜே.வி.பி. மீண்டும் எச்சரிக்கை

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையேயான சமா தானப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகி உடனடியாக நாட்டைவிட்டுநோர்வே வெளியேற வேண்டுமெனக் கோரி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை கொழும்பில் நடத்தியது.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்துக்கருகில் பிற்பகல் 3.15 மணி அளவில் ஆரம்பமான பேரணி நோர்வே தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்துடன்நிறைவடைந்தது. இவ்வார்ப்பாட்டத்தில் தேசப்பற்றுள்ளதேசிய இயக்கத்தின் இணைத் தலைவரும் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ச மற்றும் குணதாச அமரசேகர ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் பிக்குமார் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

'புலிப்பயங்கரவாதிகளுக்கு தனிநாட்டை தீர்மானிக்கும் நோர்வே புலியே நாடுதிரும்பு', 'புலிப்பயங்கரவாதிகளுக்கு இராஜதந்திரத்தை வழங்கும் நோர்வே வெளியேறு', 'இலங்கையை கூறுபோட்டு பெற்றோலிய வளத்தை சூறையாடத் திட்டமிடும் நோர்வே புலியே வெளியேறு', 'புலிப்பயங்கரவாதிகளை விடுதலைப் போராளிகளாக அழைக்கும் நோர்வே புலியே நாடுதிரும்பு' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை இவர்கள் ஏந்தியிருந்ததுடன்



நாட்டைப் பிரிக்க எத்தனிக்கும் நோர்வே உடனடியாக வெளியேற வேண்டுமென கோஷங்களும் எழுப்பப்பட்டன. இங்கு விமல் வீரவன்ச உரையாற்றுகையில்,

புலிகளுக்கென தனிநாடு ஒன்றையே வழங்குவதற்கு திரைமறைவில் தந்திரோபாயங்களை மேற்கொள்ளும் நோர்வே வெளியேறாவிட்டால் மேலும் எமது போராட்டத்தை தொடருவோம். இது எமது நாடு. எமது நாட்டை கூறு போட எவ்விதத்திலும் இடங்கொடுக்கமாட்டோம். புலிப்பயங்கரவாதிகளின் திட்டங்களுக்கு துணை போகும் நோர்வே உடனடியாக வெளியேற வேண்டும் எனத் தெரிவித்தார். இவ்வார்ப்பாட்டத்தில்சில வெளிப்பிரதேச மக்களும் கலந்து கொண்டனர். (க)

## இராசி பலன்

**10.04.2006**
**(பங்குனி 27, திங்கட்கிழமை)**
**துவாதசி முற்பகல் 5.15மணிவரை**
**பூரம் பின்னிரவு 5.25மணிவரை**
**இராகுகாலம் 7.36-9.06மணிவரை**
**சுபநேரம் 12.06-01.36மணிவரை**
**4ஆவது பங்குனித் திங்கள்**

| | |
|---|---|
| மேடம் | காரிய தாமதம், தொழில் நன்மை, மனச்சோர்வு, உடல் நலக்குறைவு. |
| இடபம் | வீண்பயம், மாதா சுகம், போசன நன்மை, எடுத்த கருமம் தாமதமாகும். |
| மிதுனம் | சத்துருஜெயம், பிரயாணநன்மை, நண்பர் சந்திப்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| கடகம் | காரிய சாதனை, வஞ்சகம், தனவிரயம், விவாதம். |
| சிங்கம் | ஜனவசியம், நல்ல முயற்சி, போசன சுகம், ஆழ்ந்த சிந்தை. |
| கன்னி | நண்பர்கள் விரோதம், முயற்சிதாமதம், மனக்கவலை, பிரயாணம். |
| துலாம் | குதுகலம், காரியசித்தி, நல்ல மனைவாசம், தொழில் மேன்மை. |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, சர்வாதிகாரம், புதிய தகவல், தொழில் நன்மை. |
| தனுசு | குடும்ப சுகம், முயற்சி தாமதம், பிரயாணம், பித்தரோகம். |
| மகரம் | பெரியோர் வெறுப்பு, தர்மம், போசனசுகம், மாதாபயம். |
| கும்பம் | மனச்சோர்வு, புதியபொருள்சேர்க்கை, தனலாபம், காரிய சித்தி. |
| மீனம் | தேகநலன், முயற்சி கைகூடும், செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
-வளவன்

# இலங்கையர்களுக்கு லிபியாவிலும் வேலைவாய்ப்பு வழங்கப்படுமாம்!

இலங்கையின் பயிற்சி பெற்ற டாக்டர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர்களுக்கு வரலாற்றில் முதல் தடவையாக லிபியாவில் வேலைவாய்ப்பளிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

தொழில் உறவுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுடசெனவிரத்ன லிபிய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டதற்கமைவாகவே இலங்கையருக்கு அந்நாட்டில் வேலைவாய்ப்பளிப்பதற்கு லிபிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

அமைச்சர் அதாவுட செனவிரத்ன, இலங்கைக்கான லிபியத் தூதுவர் ஹிந்தி அப்துல் லதீபை, லிபியத் தூதுவராலயத்தில் அண்மையில் சந்தித்துப் பேசியதையடுத்தே இத்தகைய இணக்கப்பாடு காணப் பட்டுள்ளது.

அமைச்சர் அதாவுட செனவிரத்ன மற்றும் லிபியத் தூதுவருக்கு இடையிலான மேற்படி சந்திப்பின் போது, இலங்கை சுனாமியால் பாதிக்கப்பட்ட போது லிபிய அரசாங்கம் வேறு உதவிகளைப் புரிந்ததாக சுட்டிக்காட்டிய லிபியத் தூதுவர் அப்துல் லதீப் கல்வி மற்றும் சுகாதார மேம்பாடு கருதி லிபிய அர சாங்கம் உலக முஸ்லிம் கலாசார கேந்திர நிலையத்தின் ஊடாக எதிர்காலத்தில் இலங்கைக்கு பல உதவிகளைச் செய்வதற்கு திட்ட மிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, லிபியாவுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்லும் வறுமைப்பட்ட இலங்கை நாட்டவர்கள் விமான ரிக்கட் கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளை சமாளிக்க முடியாதவர்களாக இருக்கின்றவிடத்து, லிபிய அரசாங்கம் அவர்களுக்கு குறைந்த சலுகைக் கட்டணங்களில் சலுகை காட்ட வேண்டுமென்று அமைச்சர் அதாவுட தூதுவரிடம் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக லிபியத் தலைவர் கடாபியின் ஆலோசனையைப் பெற்று மேற்குறித்த பிரச்சினைக்கு சிறந்த முறையில் தீர்வைப் பெற்றுத் தருவதாக தூதுவர் அப்துல் லதீப் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் மேற்படி விடயங்கள் குறித்து லிபியத் தலைவர் கடாபியுடன் உத்தியோகபூர்வமாகப் பேசுவதற்கு அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அதாவுட செனவி ரத்னவை லிபியத் தூதுவர் கேட்டுக் கொண்டார்.

உலக முஸ்லிம் கலாசார மத்தியஸ்தானத்தின் செயலாளர் எம். எச்.எம்.அன்ஸார் ஆகியோரும் இச் சந்திப்பில்கலந்துகொண்டனர். (க-7)

# பாடப் புத்தகங்களை கவனமாக பயன்படுத்துவோருக்கு விருது

(கொழும்பு

ஆண்டு தோறும் பாடப்புத்தகங்களை மிகவும் கவனமாகப் பயன்படுத்தும் மாணவர்கள் வகுப்பு ரீதியாக தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கி கெளரவிக்கும் வேலைத்திட்டம் ஒன்றினை கல்வியமைச்சு ஆரம்பிக்கவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அரியரத்ன ஹேலகே தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலை மட்டகணிப்பீட்டு வேலைத் திட்டத்தின் போது பாடப்புத்தகம் பயன்படுத்தும் விதம் தொடர்பாகவும் மதிப்பீடு செய்து புள்ளிகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் தமக்கு இலவசமாக வழங்கப்படும் பாடப்புத்தகங்களை கவனமாக பேணிப் பாதுகாப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இவ் விஷேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வகுப்பறை ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரசாங்கப் பாடசாலைகளில் கல்விகற்கும் தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு இலசப்பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் இலவசப் பாடப்புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஆண்டுதோறும் பெருமளவு நிதியினை கல்வியமைச்சு செல விட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடப்புத்தகங்களை ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்காவது பயன்படுத்தக் கூடிய வகையில் மாணவர்கள் மத்தியில் வழிப்புணர்வு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# விக்னேஸ்வரனின் படுகொலைக்கு பல்வேறு அமைப்புகள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் பேரவைத் தலைவரும் இலங்கை வங்கியின் திருமலை மாவட்டக் கிளையின் அதிகாரியுமான வ.விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டமைக்கு பல்வேறு அமைப்புகளும் தொடர்ந்து தமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.**

இந்த வகையில் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

## வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

திருமலையில் தமிழ் மானம் காக்க வீரமுடன் செயற்பட்ட விக்னேஸ்வரனை திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழர்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஜெனீவாவில் நடந்த சமாதானப் பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட முடிவை அமுல்படுத்தியிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா? ஏன் அமுல்படுத்த அரசுக்கு தயக்கம் மீண்டும் அடுத்த சுற்றுப் பேச்சு எதற்கு?

மஹிந்தவினால் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட மறுகணமே உயர்பாதுகாப்பு வலய பிரதேசத்தில் கடற்படை, பொலிஸ்படை, இராணுவப்படை, புலனாய்வுப் படைஎன பல படை புடை சூழ பாதுகாப்பு கொடுக்க புல்லர் கூட்டமாம் ஒட்டுப்படை துணிகரமாக தாக்குதலை மேற்கொண்டு சாதுரியமாக தப்பிவிட்டார்கள். அப்போது பாதுகாப்புப் படை என்ன செய்தது?

மஹிந்தவின் சிந்தனை தமிழரை அழிப்பதுதானா? மஹிந்தவின் சிந்தனையில் தமிழர்களை அழிப்பது என்ற உணர்வு ஊறியிருப்பதை கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.

ஜனாதிபதி சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்டவர் போடும் உத்தரவுகளை பாதுகாப்புப் படை ஏற்காத விடத்து யாருக்கு உத்தரவுகள் போடுவது? அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட எம் தமிழருக்காக குரல் கொடுத்த வல்லாளன் சொல்லின் செல்வன்.

நெஞ்சுரத்துடன் வீரம் பேசிய மாவீரன் கொல்லப்பட்ட சம்பவம் கடற்றொழில் மக்களை விசனத்தில் ஆழ்த்தியுள்ளது.

இராணுவ துணையுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப் படைகளின் கண்மூடித்தனமான வெறியாட்டத்தில் எத்தனை அப்பாவி மக்கள் இறந்துவிட்டார்கள்.

அரசே! இக் கொலைக்கு பொறுப்பேற்றுக் கொள்வது யார்? மேலும் இதுபோன்ற கொலைவெறியாட்டம் நடக்காது பார்த்துக்கொள்ள வேண்டியது அரசின் கடமை யாகும்.

அரச உதவியுடன் நடைபெறும் இதுபோன்ற கொலைகளையெல்லாம் சர்வதேசமே பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இதற்கு முடிவில்லையா? உடனடியாக தீர்வுகாண வேண்டியவர்கள் நீங்கள்தான்.

நீங்களும் கைவிரித்தால் எமது மக்களை பாதுகாக்க வழி என்ன? மீண்டும் ஒரு போரா? முடிவை சீக்கிரம் கொடு சர்வதேசமே. இனி ஒரு போர்வரின் அது நிரந்தர நிம்மதியான வாழ்வுக்கான போர்.

தமிழினம் ஒன்றுபட்டே போர்புரியும் நிலைக்கு தள்ளப் பட்டுவிட்டார்கள். இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றுள்ளது.

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

உச்சப் பாதுகாப்பு வலயத்தில், 3 பக்கங்களிலும் படைகளின் முகாம்கள், அலுவலகங்களும், சோதனைச் சாவடிகளும், நாலாம் பக்கத்தில் கடலும் அமைந்துள்ள இலங்கை வங்கியின் திருமலைப் பிராந்திய அலுவலகத்தில், பட்டப் பகலில் திருமலை மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இப் படுகொலையானது ஜனநாயக ரீதியாகவும், அகிம்சை முறையிலும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போரை ஆயுதம் கொண்டு அழித்தொழிக்கும் கொடூரமான ஜனநாயக விரோதச் செயல் மட்டுமல்ல, ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு அடிக்கப்படும் சாவுமணி யாகும்.

மேலும், அரச உச்சப் பாதுகாப்புக்கும் இலங்கை வங்கியின் பிராந்திய அலுவலகத்தின் உச்சப் பாதுகாப்புக்கும் மத்தியில், கடமை நேரத்தில் நடைபெற்றிருக்கும் இப் படுகொலை, அரச கூட்டுத்தாபன, உள்ளூராட்சி அலுவலகங்கள் அமைச்சுகள், திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் ஆகும்.

இக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களை அரசு கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி ஜனநாயகக் குரல்களைப் பாதுகாப்பதோடு, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி அலுவலகங்கள் அமைச்சுகள், திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் பிரதேச பொது அமைப்புகள்

சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறையில் இருந்து தமிழ்மக்கள் முற்றாக விடுபட்டு விடுதலை பெற்ற சமுதாயமாக சுதந்திரத்துடன் வாழவேண்டும் என்பதை இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன்.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிப் பகுதியில் சென்றபோது கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தப் படுகொலையை அரசோ அல்லது அரச பாதுகாப்பு இயந்திரங்களோ எந்தவாறாயினும் நியாயப்படுத்தி விடமுடியாது. தெற்கின் இனவாத சக்திகளின் கரம் நீண்டு செயற்படுவதையே திட்டமிட்ட இப் படு கொலை நிரூபித்து நிற்கிறது.

மக்கள் தொண்டனாக, தமிழ் தேச விடுதலைக்காகவும், மனித உரிமை மேம்பாட்டிற்காகவும், மக்கள் எழுச்சிக்காகவும் அயராது உழைத்த இவரை இந்த இனவாத சக்திகள் மரணிக்க செய்திருக்கின்றன.

இந்த ஈவிரக்கமற்ற கொடூர கொலையினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என நல்லூர் பிரதேச பொது அமைப்புகள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தீவக பொது அமைப்புகளின் ஒன்றியம்

மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள் மூலம் தமிழ்த் தேசியத்தின் வலுவான உறுதியையும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் சிதைத்து விட முடியாது என்பதனை சம்பந்தப்பட்டோர் உணர வேண்டும்.

தமிழர் தலைநகரான திருகோணமலையின் தமிழ்க் காவலன் தமிழ் மக்கள் பேரவைத் தலைவன் விக்னேஸ்வரன் படுகொலையானது மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித்தனமான, கோழைத்தனமான, கஞ்சத்தனமான செயல் என்று தீவக மக்கள் பொது அமைப்புக்களின் ஒன்றியம் மிகுந்த துயரத்துடனும், உள்ளமனக் குமுறலுடனும் தெரிவிக்கின்றது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது திருகோணமலை தமிழ்த் தேசியத்திற்கு தந்த வெற்றியை பொறுக்க முடியாமையின் அநாகரிகம்தான் தமிழ் காவலன் விக்னேஸ்வரன் படுகொலையாகும்.

அமரர் அண்மைக்காலங்களில் தமிழ்த் தேசியத்திற்கு ஆற்றிய தொண்டினை நாம் எளிதில் மறந்துவிட முடியாது. இவ்வாறான படுகொலைச் செயற்பாடுகள் இதுதான் முதற் தடவை அல்ல. சமாதானச் செயற்பாடுகள் தொடங்கிய காலம் முதல் அரசும் இராணுவமும், ஒட்டுப்படைகளும் செய்து வந்த அநியாயமான அக்கிரமக் கொலைகளை, தமிழ் ஈழமும், சர்வதேசமும் நன்கு அறியும்.

இதனை நன்கு தெரிந்து புரிந்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னைய தலைவர் ஆணித்தரமாக ஒட்டுப் படைகளின் செயற்பாடுகளை தெரியப்படுத்தி இருக்கின்றார். இவ்வாறான கொலைகள் மூலம் தமிழர் தம் தாயகக் கோட்பாட்டையும் தமிழ்த் தேசியத்தின் வலுவையும், ஒற்றுமையையும் குறைத்துவிடலாம் என மனப்பால் குடிக்கும் இனவாதிகள் எண்ணம் நிறைவேறப் போவதில்லை.

மாறாக எமது தமிழ்த் தேசியத்தின் வலுவான உறுதியும், ஒற்றுமையும் நிலைத்து நிற்பதோடு இன்றும் ஆயிரமாயிரம் தேசப்பற்றாளர்கள் உதயமாவார்கள் என்று தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர் ஒன்றியம்

அரசானது தனது ஒட்டுப்படைகளை வைத்து மீண்டும் ஒரு தமிழின பற்றாளரையும், தமிழ் மக்களின் துன்பங்களை துணிச்சலுடன் வெளியுலகத்திற்கு எடுத்துக் காட்டிய உத்தமரையும் படுகொலை செய்துள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் இச் செயலானது சமாதானத்தின் மீதான அதனது போலிமுகத்தினையே எடுத்துக் காட்டுகின்றது.

ஜெனீவா பேச்சுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நிறைவேற்ற அரசு முயற்சித்திருந்தால் கூட இப்படியான படுகொலைகளை தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

எனவே அரசின் போலி முகத்தினை சர்வதேசம் சரியாகப் புரிந்துகொண்டு தமிழ் மக்களுக்கு உடனடியாக தீர்வினைப் பெற்றுத் தரவேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# விக்னேஸ்வரனின் படுகொலை சமாதான பேச்சுவார்த்தைக்கு ஏற்பட்டுள்ள சவால்

## பெ.சந்திரசேகரன் எம்.பி

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் மாமனிதர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது சமாதான பேச்சுவார்த்தைக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

போர் நிறுத்தமும் சமாதானப் பேச்சுவார்த்தையும் இழுபறிபட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், விக்னேஸ்வரனின் படு கொலை சமாதான விரும்பிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள் ளது.

இந்தப் படுகொலைக்கு அரசாங்கம் காரணம் இல்லை என்று கூறி அமைதியாக இருக்குமானால் ஜனநாயகமே கேலிக்கூத்தாக மாறிவிடும்.

இவ் விதமான படுகொலைகள் திடீரென நடப்பதில்லை. புதிய ஜனாதிபதி பதவியேற்ற காலத்திலிருந்து தொடர்ச்சியாக நடை பெற்று வருகின்றது.

உண்மையில் ஜனாதிபதிக்கு சமாதானப் பேச்சுவார்த்தையில் அக்கறை இருக்குமானால், இத்தகைய படுகொலைகளை அவர் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

போர்க்கால நடவடிக்கை யாக தமது செயற்பாட்டில் தீவிரத் தை அதிகரிக்க வேண்டும்.

போருக்கான காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளே என்று இன வெறியர்களால் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வரும்போது அரசாங்க துணை இராணுவக் குழுக்களே இதற்குக் காரணம் என்ற வாதமே தற்போது நிரூபணமாகி வருகின்றது.

அரசியல் படுகொலைகளை தடுத்து நிறுத்த ஜனாதிபதி ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பெ. சந்திரசேகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

# உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுக்கு பயிற்சி ?

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் மனித வளங்களை விருத்தி செய்து பொது மக்களுக்கு பரந்த சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத்திட்டத்துக்கு இலங்கை உள்ளூராட்சி சபை உதவும்.

இதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கட்டம் கட்டமாக பயிற்சியளிக்கப் படும்.

உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு வெளிநாடுகளில் குறுகிய காலப் பயிற்சி அளிக்க மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளை இந்தியாவின் கேரளா மாநிலத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் நிலையம் ஒருங்கிணைக்கவுள்ளது. (க-7)

# விக்னேஸ்வரனின் படுகொலைக்கும் இராணுவத்துக்கும் தொடர்பில்லை

## என்கிறார் இராணுவப் பேச்சாளர்

திருகோணமலை தமிழ் மக்கள் பேர வையின் தலைவர் வன்னிய சிங்கம் விக்னேஸ்வரனின் படுகொலைச் சம்பவத்துக்கும், இராணுவத்தினருக்கும் எந்தவிதமான தொடர்பு மில்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இராணுவம் துணைப்படைகளுடனோ அல்லது வேறு எவருடனேயும் சேர்ந்து இவ்வாறான அவசியமற்ற கொலைகளில் ஈடுபடுவதில்லை. எனவே இராணுவம் இப் படுகொலையை மேற்கொள்ள வில்லை என உறுதிடக் கூறுகின்றேன் என இராணுவப் பேச்சாளர் தெரி வித்தார்.

இதேவேளை விக்னேஸ்வரனின் படுகொலை சம்பவத்திற்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கப்படும் என்றும், இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதி யளித் துள்ளார்.

எது எவ்வாறாயினும், விக்னேஸ்வரனை படுகொலை செய்தவர்களை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதாக ஜனாதிபதி அளித்த வாக்குறுதிகளும், அரசின் செயற்பாடுகளும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காக கூறப்படும் கண்துடைப்பு நடவடிக்கை என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (க-5)

# ஆசிரியர்களுக்குப் பயிற்சி

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 10, 11 மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வலய மட்டத்தில்பயிற்சி நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமையிலிருந்து 20ஆம் திகதி வரை இப் பயிற்சிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலப்பாடம் இன்றும், நாளையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சமூகக்கல்வி, சமயம்15, 16ஆம் திகதிகளிலும், அழகியல் , தொழில்நுட்பம்-17, 18ஆம் திகதிகளிலும், கணிதம், விஞ்ஞானம்-19, 20 ஆம் திகதிகளிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (க-108)

# இன்று ஒரு தகவல்

## மூன்று பிச்சைக்காரர்கள்

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர். நிறைய நல்ல காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருந்தார். அவரைத் தேடி நிறையப்பேர் வருவார்கள். இவரால் முடிந்த உதவியைச் செய்வார்.

ஒரு சமயம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள். ஏதாவது பொருள் உதவி பெறலாம் என்று நினைத்து மூன்று பேரும் தனித்தனியாக வந்தார்கள். முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான். "ஐயா எனக்கு ஐந்து ரூபா வேண்டும். தயவுசெய்து கொடுங்கள்" என்று கேட்டான். இதைக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்து விட்டது. "என்ன இது, நான் ஏதோ உன்னிடம் கடன் பட்டிருப்பது போலவும் அதைத்திருப்பிக் கொடுங்கள் என்று கேட்பது போலவும் கேட்கிறாய்? எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாவெல்லாம் தரமுடியாது. இந்தா இரண்டு ரூபா! எடுத்துக்கொண்டு ஓடு" என்று கூறி இரண்டு ரூபாவைத் தூக்கியெறிந்தார். அவன் அதை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டான்.

அடுத்ததாக மத்தியான வேளையில் ஒரு பிச்சைக்காரன் வந்தான். இவன் எப்படிக்கேட்டான் தெரியுமா? "ஐயா... பத்து நாட்களாக ஒருவேளை உணவு கூட சாப்பிடவில்லை தயவுசெய்து உதவுங்கள்" என்றான். "உனக்கு எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டார் இவர். "நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்" என்றான். "இந்தா பத்து ரூபா. இதை வைத்துக்கொள். ஏதாவது வாங்கிச் சாப்பிடு" என்றார். அவனும் அந்தப் பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அதன் பின்பு பின்னேரம் போல மூன்றாவதாக வந்த பிச்சைக்காரன் கேட்ட விதம் என்ன தெரியுமா? "மகாராஜா உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசனம் செய்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன். அறவழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் தான் கண் கண்ட தெய்வம்" என்றான். உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? "தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். முதலில் சாப்பிடுங்கள். மற்றதை பின்னர் பார்க்கலாம்" என்று கூறி அவனை உட்கார வைத்து சாப்பாடு கொடுத்தார்.

அவன் சாப்பிட்டு முடித்தான். அதன்பின் இவர் கேட்டார். "இப்போது சொல்லுங்கள் நான் என்ன செய்ய வேண்டும் உங்களுக்கு?" என்று கேட்டார். அந்தப் பிச்சைக்காரன் இந்த அன்புக்கு நெகிழ்ந்து "ஐயா...பசியோடு வந்தேன். அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள். அதுபோதும் எனக்கு. வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என்மீது காட்டும் அன்பை நான் எப்போதும் மறக்கமாட்டேன் உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும். உங்களுக்கு ஒரு குறையும் வராது" என்றான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவர் மனதைத் தொட்டது. அவன் மீது இருந்த அன்பு பன்மடங்கு அதிகமானது. அதன் விளைவு என்ன தெரியுமா? "இதோ பாரப்பா. நீ இனிமேல் வெளியே எங்கும் போகவேண்டாம். இங்கேயே இருந்துவிடு" என்றார். தன்னுடைய பங்களாவுக்குப் பக்கத்திலேயே அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக் கொடுத்து கடைசிவரை அந்த ஆளைத் தன்னுடனேயே வைத்துக் கொண்டார்.

இந்தக் கதையை சுவாமி சிவானந்தர் சொல்லியிருக்கிறார். இறைவன் அந்தக் கோடீஸ்வரர் மாதிரியாம். அந்த மூன்று வகைப் பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம். இன்றைக்கு உள்ள பக்தர்கள் எல்லாம் இந்த மூன்று வகையில் ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். முதல் வகைதான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

நமது ஊர்ப்பக்கம் ஒரு பெரியவர் இருந்தார். இவர் செலவு செய்யப் பயப்படுவார். ஒரு பைசா ஒருவருக்குக் கொடுப்பதென்றாலும் மிகவும் யோசிப்பார். இவரைத் தேடி ஒரு நாள் சில பிச்சைக்காரர்கள் வந்தார்கள். "ஐயா நாங்கள் எல்லோரும் சேர்ந்து பிச்சைக்காரர் சங்கம் ஆரம்பிக்கிறோம் அதற்கு நீங்கள் ஒரு ஆயிரம் ரூபா நிதியுதவி செய்யுங்கள்" என்று கேட்டனர்.

"அதெல்லாம் ஒன்றும் கொடுக்க முடியாது. அவ்வளவு பணமெல்லாம் என்னிடம் கிடையாது" என்றார் இவர். "சரி ஒரு நூறு ரூபாவாவது கொடுங்கள்" என்றனர். "அதுவும் முடியாது" என்றார். "பத்துக்காசாவது கொடுங்கள்" என்றனர். "அதுவும் என்னிடம் கிடையாது" என்றார் அந்தப் பெரிய மனிதர். "சரி அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்" என்றனர். "என்ன செய்யவேண்டும்?" என்றார் இவர். "நீங்களும் எங்கள் சங்கத்தில் ஒரு அங்கத்தவராக இணைந்து விடுங்கள்" என்றனர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளை விடுதலைப் போராளிகளாக கூறமுடியாது என்கிறார் மங்கள சமரவீர

(கொழும்பு)



**தமிழீழ விடுதலைப்புலிகள் விடுதலைப்போராளிகள் அல்ல. புலிகளின் தலைவர் பிரபாகரனும் நெல்சன் மண்டேலா அல்ல என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகமான டெய்லி மிரருக்கு அவர் அளித்த நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நேர்காணலின் விபரம் வருமாறு,

***கேள்வி:*** இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கள் திட்டமிட்டபடி நடைபெறாது என்று கூறப்படுகிறது. நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

***பதில்:*** இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கள் கண்டிப்பாக நடைபெறும். கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் அழுத்தங்களூடாகத் தான் பேச்சுகளுக்கு வந்தனர். இம்முறை அப்படி நடைபெறாது. மேற்குலக நாடுகளும் இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், இணைத் தலைமை நாடுகளும் இப்பிரச்சினையில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற போது வன்முறைகள் வெடித்தன. அப்போது ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைபேச்சுமேசைக்குதிரும்பவேண்டும்என எச்சரித்தது. தற்போது மஹிந்த ராஜபக்ஷ பொறுமையுடன் செயற்படுகிற புதிய உத்தியை கையாள்வதால், அவரது நடைமுறைச் சாத்தியமான செயற்பாடு பாராட்டுக் குரியதாகியுள்ளது. விடுதலைப் புலிகள் இம்முறை விளையாட முடியாது.

***கேள்வி:*** யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் தொடர்பான பேச்சுக்கள்தான் நடைபெறுகின்றனவே?

***பதில்:*** யுத்த நிறுத்தத்துக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கும் இடையே வேறுபாடு உண்டு. யுத்த நிறுத்த ஒப்பந்தமானது விடுதலைப் புலிகளை பலப்படுத்தியுள்ளது. அண்மையில் தமிழீழக் காணிகள் சட்டத்தை நிறைவேற்றியுள்ளதை நல்ல உதாரணமாகக் கொள்ளலாம்.

விடுதலைப் புலிகள் மற்றும் தமிழர்களின் அபிலாஷைகளுக்கு இடையே வேறுபாடு உள்ளன.. பெரும்பான்மையான தமிழர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடில்லாத பிரதேசங்களில் வசிக்கின்றனர்.

***கேள்வி*** : துணை இராணுவக் குழுவினரது ஆயுதக் களைவை விடுதலைப் புலிகள் வலியுறுத்துகிறார்களே...?

***பதில்:*** ஜெனீவா பேச்சுக்களின் பின்னர் 43 யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் நடைபெற்றுள்ளன. அதில் 3 மிகவும் பாரதூரமானவை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடந்தவை.

கடற்படையினர் மீது தற்கொலைப் படைத்தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தினர். மேற்குலகம் இதை பார்த்துக் கொண்டிருக்கிறது. லண்டனில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலும் இலங்கையில் மேற்கொள்ளப்படுகிற தற்கொலைத்தாக்குதலும் ஒத்திருப்பதாக லண்டனின் தந்திரோபாயங்களுக்கான மையம் ஒன்றின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு விடுதலைப் புலிகள் இத்தொழில்நுட்ப உத்தியை அளித்திருக்கக் கூடும் என்று பலரும் கருதுகின்றனர். ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகள் இது தொடர்பில் தீவிர விசாரணை நடத்துகின்றன. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் தற்கொலைத் தாக்குதல் யுத்தியையும், படுகொலைகளையும் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருவதையே இது காட்டுகின்றது.

சிலர் கருணாவை குற்றம் சாட்டுகின்றனர். இது தொடர்பில் அரசாங்கமும், அரசபடைத்தரப்பும் ஜெனீவா பேச்சில் விரிவான அறிக்கையைத் தாக்கல் செய்யவுள்ளது. விடுதலைப் புலிகள் உள்ளிட்ட எந்த ஒரு ஆயுதக் குழுவின் செயற்பாட்டையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது.

அண்மையில் கண்காணிப்புக் குழுவினர் கருணா குழுவைச் சேர்ந்த சிலரை சந்தித்ததாக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். அவர்கள் தாங்களாகவே கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்ததாகக் கூறியுள்ளனர். ஒரு பொறுப்புள்ள நிறுவனமாகிய கண்காணிப்புக்குழு இத்தகைய அறிக்கைகள் வெளியிடுவதைத் தவிர்க்கலாம்.

***கேள்வி:*** விடுதலைப் புலிகளை சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் கூறியுள்ளாரே...

***பதில்:*** கண்காணிப்புக் குழுவினர் மேற்கொள்வது கடினமான பணி. விடுதலைப் புலிகளை எவரும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று கூறமாட்டார்கள். தென்னிலங்கையை விட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளதமிழர்களுக்கு குறைவான சுதந்திரமே உள்ளது. பிரபாகரன் நெல்சன் மண்டேலாவாக முடியாது.

விடுதலைப் புலிகள் ஒரு வன்முறையான பாசிச குழு. எந்த ஒரு ஜனநாயக சமூகத்திலும் ஏகப் பிரதிநிதி என்பது இருக்கமுடியாது என்பதை மேற்குலகம் புரிந்து கொள்ளவேண்டியது அவசியம். தமிழ் சமூகத்திற்கு வேறு சிந்தனைகள் இல்லை என்று உங்களால் கூற முடியாது. விடுதலைப் புலிகள் ஜனநாயக பாதைக்கு திரும்புகிற நாளில் நாம் எல்லாவற்றையும் விட்டு விட்டு அவர்களுக்கு செங்கம்பள வரவேற்பளிப்போம்.

***கேள்வி:*** விடுதலைப் புலிகளுக்கு நோர்வேயில் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது பற்றி?

***பதில்:*** இலங்கையானது சூடான், இஸ்ரேல் அல்லது பலஸ்தீனம் போன்றது அல்ல. இந்த நாட்டின் உணர்வுகளுக்கு அவர்கள் மதிப்பளிக்க வேண்டும். இலங்கை ஜனாதிபதி கட்டமைத்திருக்கிற தென்னிலங்கையின் ஒருமித்த இணக்கப்பாட்டுக்கு எதுவித குந்தகம் விளைவிக்கும் செயற்பாட்டையும் நோர்வே மேற்கொள்ளக் கூடாது. நோர்வே மீது விமர்சனங்கள் இருந்த போதும் சில கட்சிகள் அனுசரணைப் பணியில் அவர்கள் நீடிப்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

முதல்முறையாக தென்னிலங்கையில் ஒருமித்த கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கை மக்களின் கருத்துகளை நோர்வே கவனமாக உள்வாங்க வேண்டும்.

***கேள்வி:*** பயங்கரவாதம் தொடர்பில் மேற்குலகம் இரட்டை நிலைப்பாடு மேற்கொள்கிறதா?

***பதில்:*** விடுதலைப் புலிகள் நவீன முறையில் நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றனர். இது தமிழர்கள் வாழ்கிற வெளிநாடுகளின் சட்டங்களுக்கு எதிரானது. இது தொடர்பில் பல நாடுகள் தீவிரமாக கண்காணிக்கத் தொடங்கியுள்ளன.

சிறார் படை சேர்ப்பு தொடர்பாக மேற்குலகம் எச்சரிக்கைகளை விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஐரோப்பிய ஒன்றியம் இது விடயத்தில் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. மத்திய ஆபிரிக்காவில் சிறார் படை சேர்ப்பு விவகாரத்தில் பணியாற்றியவர்தான் புதிய நோர்வே சிறப்புத் தூதுவர். அத்தகைய அனுபவத்தையும் அவர் முதல் முறையாக இங்கே பெறுவார்.

***கேள்வி:-*** யுத்தத்துக்கு திரும்பப் போவதாக விடுதலைப் புலிகள் அறிவிப்பது குறித்து?

***பதில்:*** மிகவும் வருத்தமடைகிறோம். போர் தீர்வாகாது. இருப்பினும், பேச்சுக்கள் நடத்திக்கொண்டே நாம் அனைத்துக்கும் தயாராக வேண்டியது அவசியம். அவர்கள் என்ன செய்வார்கள் என்பது நமக்குத் தெரியாது.

***கேள்வி:*** ஜெனீவாவுக்கு மாற்றுவழியில் செல்வதாக விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனரே?

***பதில்:*** இந்த நாட்டின் குடி மக்கள் அனைவரும் நாட்டின் உத்தியோகபூர்வ வழியில்தான் வெளியேற வேண்டும். இல்லையெனில் வீட்டுக்குள்தான் உட்கார்ந்திருக்கவேண்டும் என்றார் மங்கள சமரவீர. (கு-6)

# ஆவரங்காலில் சட்டவிரோத மதுவிற்பனைக்கு தடை!

(நல்லூர்)

ஆவரங்கால் மேற்கில் அப்பகுதி கிராமசேவையாளர் சி.கணேசலிங்கத்தினால் அமைக்கப்பட்ட விழிப்புக் குழுவின் முயற்சியால் சட்டவிரோத மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ளன.

அத்துடன் அப்பகுதியில் சில வீடுகளில் சட்டவிரோதமாக விற்கப்பட்டுவந்த மதுவிற்பனைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

விழிப்புக்குழுவினரின் இந்த நடவடிக்கையால் அப்பகுதி மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். (கு-134)

# பேச்சுக்கு செல்லும் புலிகளுக்கு கூடிய பாதுகாப்பு வழங்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)

ஜெனீவாவில் எதிர்வரும் 19ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தைகளுக்காக செல்லும் விடுதலைப் புலிகள் அமைப்பின் குழுவினருக்கு கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கான கூடிய பாதுகாப்புகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் ஜெனீவா பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழுவினர் கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையம் ஊடாகவே சென்றனர். அதேபோன்று இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு செல்லவரும் இவர்களுக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் உரிய பாதுகாப்பினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (கு)

# விக்னேஸ்வரனின் படுகொலைக்கு பல்வேறு அமைப்புகள் கண்டனம்

## வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம்

கடந்த வெள்ளிக்கிழமை காலை திருகோண மலையில் இடம்பெற்ற வன்னியசிங்கம் விக்னேஸ்வரனின் மிலேச்சத்தனமான கொலை ஜனநாயகத்தினதும் மனித உரிமையினதும் குரல்வளையை நெரிக்கும் கோழைத்தனமான தீய செயலாகும் என வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆர்வமுள்ள செயல் வீரரும், விசுவாசமுள்ள சமூக சேவையாளருமான விக்னேஸ்வரன் மனித உரிமை மீறல் முதலியவற்றுக்கெதிராக பாடுபட்டுழைத்தமைக்காக திருகோணமலை மக்களுக்கு மாத்திரமல்ல. உலகளாவிய ரீதியில் அனைத்து மக்களினதும் பாராட்டுக்குரியவராக விளங்கினார்.

2005ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் ஆராதனையின் போது மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டவரும் மனித உரிமைக்காக உற்சாகமாகப் பாடுபட்டு வரும் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் ஆரம்பகால உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவால் ஏற்பட்ட பாராளுமன்ற வெற்றிடத்துக்கு நியமிக்கப்படவிருந்த வேளையில் நடைபெற்ற விக்னேஸ்வரனது படுகொலை தமிழ்மக்களை மாத்திரமல்ல மனித உரிமை உலகையே அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம்

யாழ்.மாவட்ட வங்கியாளர் சங்கம் விக்னேஸ்வரனின் படுகொலையைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை வங்கி திருகோணமலை கிளை அதிகாரியான எமது வங்கிச் சமூகத்தின் மூத்த உறுப்பினர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் கடந்த வெள்ளிக்கிழமை கடமையில் ஈடுபட்டிருந்தபோது இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதை வங்கிச் சமூகம் ஆகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இப்படியான செயல்கள் வங்கியாளர்களையும், பொது மக்களையும் மிகவும் பாதித்து நிர்வாக சீர்குலைவுகளை ஏற்படுத்த இடமுண்டு.

எனவே இதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதுடன் இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாதிருக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தை இத்தால் கேட்டுக்கொள்கின்றோம்.

இத்துர்பாக்கிய சம்பவத்தால் துயரப்படும் வன்னியசிங்கம் விக்னேஸ்வரனின் குடும்பத்தினருக்கு வங்கிச் சமூகத்தின் சார்பில் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றுள்ளது.

## கிளி. மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம்

கடந்த வெள்ளிக்கிழமை இராணுவ புலனாய்வுத்துறையினரும் அவர்களோடு செயற்படும் ஒட்டுக்குழுவினரும் இணைந்து திருகோணமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவரும், தமிழ்த்தேசியப்பற்றாளருமாகிய வ.விக்னேஸ்வரனைப் படுகொலை செய்தமை த்மிழ்மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்திய அதேவேளை கொந்தளிப்பு நிலையினையும் உருவாக்கியுள்ளது.

தமிழ்மக்களின் குரலாக ஓங்கி ஒலித்த உரிமைக் குரலினை அணைத்து விடுவதன் மூலம் சிங்களப் பேரினவாதம் தனது பேரினவாதப் போக்கினை தமிழ்மக்கள் மீது திணிக்கலாம் என கனவு காண்பது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும் என ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெனீவாப் பேச்சுக்கள் நடைபெவுள்ள இவ்வேளையில் இப்படுகொலையானது பல்வேறு சந்தேகங்களையும், ஊகங்களையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்மக்கள் ஜெனீவாப்பேச்சுக்களைப் புறக்கணிக்கக்கூடிய புறச்சூழலையே இப்படுகொலை ஏற்படுத்தி உள்ளது.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவை உதாசீனம் செய்து ஜெனீவாப் பேச்சு உடன்பாட்டில் இருந்து அரசு விலகியமையே இப்படுகொலையின் வெளிப்பாடு என நாம் கருதுகின்றோம்.

இப்படுகொலை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய தொன்று. தொடர்ச்சியாக அரசு படுகொலைகளைச் செய்வதும் நாம் அதனைக் கண்டிப்பதும் தொடர்கதையாகவே உள்ளது.

எமது இருப்பையும் தமிழ் உணர்வாளர்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் மீதான படுகொலையை உடன் நிறுத்த நாம் அனைவரும் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்த அணிதிரள வேண்டிய சூழலை உருவாக்கியுள்ளது.

எனவே இப்படுகொலைகள் ஜெனீவா தொடர் சுற்றுப் பேச்சுக்களில் சிக்கல் நிலைகளை உருவாக்கும் அபாய நிலையினை சுட்டிக்காட்டுவதுடன் எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை

திருகோணமலை தமிழ்மக்கள் பேரவைத் தலைவரும் தமிழ்த்தேசியத்தின் பற்றாளருமாகிய வ.விக்கினேஸ்வரனை இராணுவ புலனாய்வுத்துறையினரும் அவர்களோடு இணைந்து செயற்படும் ஒட்டுக்குழுவினரும் படுகொலை செய்துள்ளனர். தேசியப்பற்றாளர் வ.விக்னேஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக அவரது புகழுடல் அடக்கம் செய்யப்படும் வரை அனைத்து திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள், வீடுகள் யாவற்றிலும் கறுப்பு கொடிகட்டி சோக இசை இசைக்கவிட்டு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்த விக்னேஸ்வரன் சிங்களப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜனநாயக ரீதியாக செயல்பட்ட விக்னேஸ்வரன் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இன வன்முறைக்கு ஆளானபோதெல்லாம் துணிந்து குரல் கொடுத்தவர்.

தனது உயிருக்கு ஆபத்து எப்போதும் இருந்து வந்துள்ளபோதும் தனது உயிருக்கு அஞ்சாது இனவிடுதலைக்கு குரல் கொடுத்து வந்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் அரசியல் உரிமைய அங்கீகரித்து தீர்வை முன்வைக்க வேண்டும். திருமலையில் விக்னேஸ்வரனை பட்டப்பகலில் படையினர் சுட்டுக்கொன்ற காட்டுமிராண்டிச் செயல் தமிழ்மக்களை கொதித்தொழச்செய்துள்ளது. நிச்சயம் இதன் எதிர்விளைவு பெரிதாக இருக்கும் என யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவைத் தலைவரும், மனித உரிமை ஆர்வலரும், தமிழ்த் தேசியப் பற்றாளருமாகிய விக்னேஸ்வரன் ஒட்டுப்படைகளினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இப்படுகொலையானது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது. காட்டுமிராண்டித்தனமான, மனித நாகரிகமற்ற இப்படுகொலைச் சம்பவத்தைப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இப்படுகொலைச் சம்பவத்திற்கு இலங்கை அரசே பொறுப்பேற்க வேண்டும். கடந்த மாதம் ஜெனீவாவில் இடம்பெற்ற பேச்சுக்களின் பின்னரும் இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இப்படுகொலைகளின் உச்சக்கட்டமாக தமிழ்த் தேசியத்தின் தீவிர ஆதரவாளரான விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தின் மூலம் மக்கள் மத்தியில் பதட்டமும், சமாதானப் பேச்சு தொடர்பான நம்பிக்கையை முற்றாக இழந்தது போன்ற சூழலும் உருவாகியுள்ளது.

இப்படுகொலைச் சம்பவங்கள் மீண்டும் பாரிய யுத்தத்துக்கே வழிவகுக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தீவக மக்கள் நலன் காப்பகம்

தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அயராது போராடி வந்த வ.விக்னேஸ்வரன் ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதை தீவக மக்கள் நலன் காப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

திருகோணமலையில் பேரினவாதிகளாலும், அரச படைகளாலும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வந்த விக்னேஸ்வரன் அதற்கு அஞ்சாது தமிழினத்தின் விடிவுக்காய் குரல் கொடுத்து வந்த தியாகியை தமிழீழம் இன்று இழந்து விட்டது.

அவரது இழப்பு எமது இனத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

தமிழ்த் தேசியவாதிகள் அரச படை களினதும் அதன் ஒட்டுக்குழுக்களின் கோரக் கொலைக்கும் ஆளாவது தொடர்கிறது.

இது உடனடியாக நிறுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மீண்டும் யுத்தம் மூழ்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

அரசு இனியும் மௌனமாக இருக்காமல் தமிழ்த் தேசியவாதிகள் கொல்லப்படுவதை தடுக்க வேண்டும். விக்னேஸ்வரன் மறைவு சமாதானத்திற்கு விழுந்த பேரிடியாகும்.

இது ஒவ்வொரு தமிழனுக்கும் ஆயுதம் ஏந்துவதுதான் நியாயப்பாடானது என்பதை வலியுறுத்தி நிற்கிறது என தீவக மக்கள் நலன் காப்பகம் தெரிவித்துள்ளது.

## புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ. கூ. சங்கம்

தமிழ் தலைநகரில் தமிழருக்காக குரல் கொடுத்த தன் மானத்தமிழன் விக்னேஸ்வரன் கயவர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ள செயல் மனித நாகரீகமுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். இந்தப் படுகொலை யைப் புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்தேசியத்திற்காக போராடும் ஜனநாயக வாதிகளை அரச படைகள் கொல்வதன் மூலம் எதனையும் சாதிக்க முடியாது. மாறாக சமாதான முயற்சிகளை சீர் குலைக்கவே இது உதவும். நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது போன்ற கொலைகளை ஊக்கப்படுத்தாமல் இதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இல்லாவிடின் மீண்டும் ஒரு யுத்தக் களரி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.எனவே விக்னேஸ் வரன் படுகொலையை அரசே பொறுப்பேற்க வேண்டும். இதுதமிழர்களின் மனங்களில் ஆறாத துயரத்தை ஏற்படுத் தியுள்ளது.

இத்தகைய சம்பவங்கள் தொடருமானால் பாரிய விளைவுகள் ஏற்படுவதை கட்டுப்படுத்த முடியாதிருக்கும் என புங்குடுதீவு - நயினாதீவு ப்.நோ.கூ. சங்கம் தெரிவித்துள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம்

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள சமாதான காலத்திலும் இராணுவ ஆக்கிரமிப்பு படைகளாலும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுக்குழுக்க ளாலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நிறுத்த மீறல்களில் உச்சக்கட்டமாக தமிழ்த்தேசிய பற் றாளரும், சிறந்த கலைப்படைப்பாளியும், மனித உரிமை ஆர்வலருமான வ.விக்னேஸ்வரன் சுட்டுப் படுகொலை செய் யப்பட்டுள்ளார். இத்தகைய மிலேச்சத்தனமான படுகொலையை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

பொலிஸ், இராணுவ கடற்படை காவலரண்கள் மூன் றும் ஓரிடத்தில் இருந்தும் துப்பாக்கிதாரிகள் இப் படு கொலையைச் செய்து விட்டுத் தப்பிச் செல்வதற்கு இராணுவமே உடந்தையாக இருந்துள்ளது. இராணுவத்தினரின் பின்னணியில்லாமல் இக் கொலையைப் புரிவதும் இயலாத காரியமாகும் என்பது தெள்ளத்தெளிவாகின்றது.

கடந்த மாதம் ஜெனீவாவில் எட்டப்பட்ட உடன்படிக்கையின் படி இராணுவ ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டிய அரசே அவர்கட்கு புகலிடமளித்து அவர்களிற்கு ஆயுதங்களை வழங்கி தமிழ் மக்களினதும் தேசியப் பற்றாளர்களினதும் படுகொலைகளின் பின்னணியிலிருப்பது அரசின் சமதான பேச்சிலுமுள்ள நம்பிக்கையை தவிடுபொடியாக்கியுள்ளது.இத்தகைய கொலைகள் சமாதானப் பேச்சில் பின்ன டைவை ஏற்படுத்துவதுடன் மீண்டும் ஓர் யுத்தத்திற்கே வழிவகுக்கும்.

எனவே அரசு உடனடியாக யதார்த்த நிலையை உணர்ந்து படுகொலைகளின் சூத்திரதாரிகளான ஒட்டுக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதுடன் இவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதே அடுத்த கட்ட சமாதான பேச் சிற்கு வலுவூட்டும் என்பதை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் வலியுறுத்த விரும்புகின்றது.

(சு,து)

## யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபை

திருகோணமலையில் தமிழ் மக்களுக்காகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் துணிச்சலோடு குரல் எழுப்பி வந்ததிருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை தலைவரும் வங்கி அதிகாரியுமான வன்னிய சிங்கம் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டமையினை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவர் தமிழ் மக்களின் உரிமைக்காக பல ஆண்டுகாலமாக குரல் கொடுத்து வருபவரும் சிங்கள தீவிர பேரினவாதிகள் திருகோணமலையில் இனவிரோதச் செயற்பாடுகளை மேற்கொண்ட வேளைகளில் வெளிப்படையாக அதனை எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், தமிழர்களின் கௌரவத்தைபேணிக் காப்பதிலும் தமிழின ஆதரவுச் செயற்பாடுகளிலும் முனைப்போடு செயற்பட்டு வந்தார்.

தமிழ் மக்களுக்காகவும் அவர்களின் கௌரவமான தீர்வுக்காக உரத்துக் குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கல்விமான்களும் அரச படைகளாலும் அவர்களோடு சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளாலும் கோழைத்தனமாக கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதன் பின்னரான ஒரு நல்லெண்ண சூழ்நிலையில் அரசாங்கமும், விடுதலைப் புலிகள் அமைப்பும் பேச்சுவார்த்தை மேற்கொண்டுவரும் இந்த வேளையில் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்ற ஒட்டுப் படைகளினால்தமிழீழ ஆதரவாளர்கள், கல்விமான்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலதரப் பட்ட தமிழ்த் தேசப் பற்றாளர்கள் கொல்லப்படுவதை இனிமேலும் தமிழ் பேசும் சமூகம் அனுமதிக்கப் போவதில்லை.

தமிழர் தாயகத்தில் ஒரு நல்லெண்ண சுபிட்சமான தமிழீழ மண்ணில் ஒரு சுதந்திரமான வாழ்வை வாழ்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ள நிலையில் தமிழின ஆதரவாளர்கள் மீதான இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என கூட்டுறவுச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## ❷ பிள்ளைகள் சமாதானத்தின் சரணாலயங்கள்

### கல்வி

*கொள்கைகள்*

★கல்வி முயற்சிகளை ஆதரித்தல், சகல மனித நேய உதவியிலும் முன்னுரிமை அம்சமாக அமைதல் வேண்டும்.

★ கல்வியானது பிள்ளையின் அடிப்படை உரிமையும் போதனையின் அத்தியாவசிய அம்சமுமாகும்.

**செம்மையான நடைமுறைகள்**

1.கல்வி அமைப்புக்களைப் பேணுதலும் புனரமைத்தலும்.



2.தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தற்காலிக அடிப்படையில் கல்வி புகட்டுவதற்கான மாற்று அமைப்புகளையும் கட்டுமானங்களையும் ஏற்பாடு செய்தல். இது விடயத்தில் சமுதாயத்தினரை முடிந்தவரை ஈடுபடுத்துதல் வேண்டும்.

3.பயிற்றப் பெற்ற ஆசிரியர்கள் பற்றாக் குறையாக இருக்குமிடங்களில் 'தொண்டர் ஆசிரியர்களைப்' பயிற்றுதல்.

4.பிள்ளைகள் தம் சுயத்துவத்தை இழந்த போதும் பள்ளி செல்லும் வாய்ப்பினை உறுதி செய்தல்.

5.எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச சீருடைகளை உறுதி செய்தல். இடப்பெயர்வினால் இழந்த சீருடைகளுக்கு மாற்றுச் சீருடை வழங்குதல். தற்காலிகமாக சீருடை அற்றிருக்கும் பிள்ளைகளுக்குப் பாகுபாடு காட்டப்படாது.

6.பாடப் புத்தகங்கள் கிடைப்பதை உறுதிசெய்தல் தேவையான் ஏனைய உள்ளீடுகளைவழங்குதல்.

7.ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் உபகரணங்களும் கிடைக்க வழி செய்தல். விசேடமாக படிப்புத் தடைப்பட்ட பிள்ளைகள் விடயத்தில் இது முக்கியம்.

8.பிள்ளைகள் மனவதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறார்களா என்பதை இனங்கண்டு அதற்கேற்ற முறையில் அவர்களை நடத்த ஆசிரியர்களைப் பயிற்றுதல்.

9.பிள்ளைகளின் உரிமைகள், கண்ணிவெடிகள் பற்றிய அறிவு போன்ற புதிய விடயங்களை சேர்த்துக்கொள்வதற்கு வேண்டிய பயிற்சிகளையும் பொருள்களையும் ஆசிரியர்களுக்கு வழங்கு தல்.

10.'சமாதானத்துக்கான கல்வி' 'பிணக்குத் தீர்த்தல் தொடர்பான கல்வி' என்பன பற்றி வகுப்புக்கள் நடத்துவதற்கு வேண்டிய பயிற்சியையும் பொருள்களையும் ஆசிரியர்களுக்கு வழங்குதல்.

11. ஒருவரை ஒருவர் சந்தித்தல், விளையாட்டுக்கள், நாடக, கவிதை, கட்டுரைப் போட்டிகள் போன்ற சமூக உறவுகளை வளர்க்கும் நடவடிக்கைகளைப் பிள்ளைகளுக்கிடை யில் உருவாக்குதல்.

12.மேற்படி நிகழ்ச்சிகளில் இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரையும் பொருத்தமான சந்தர்ப்பங்களிற் சேர்த்துக் கொள்ள விசேட நடவடிக்கைகளை எடுத்தல்.

13.பாலர் பாடசாலைகளுக்கு, அதிலும் விசேடமாக விளையாட்டு மற்றும் சஞ்சலத்தைத் தணிக்கும் நடைமுறைகளுக்கு,ஆதரவளித்தல்.

14.பிள்ளைகள், இளைஞர்கள் ஆகியோர் பாடசாலையிற் பெயர் பதிதல், பரீட்சை எழுதுதல் முதலியவற்றைச் செய்ய இடமளிக்கும் பொருட்டு 'அமைதி நாள்கள்' "சமாதானச் சாலைகள்' ஆகியவற்றை ஊக்குவித்தல்.

### உளவியல் சார்ந்த சமூகச் சீரமைப்பும் சமூகப் புனர்வாழ்வும்

*கொள்கைகள்*

★பிள்ளைக்குச் சிறந்த இடம் குடும்பமும் சமுதாயமுமே குடும்பம், சமுதாயம், உள்ளூர்ப்பண்பாடு, மரபுகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்ட நடைமுறைகள் பெருவெற்றி தரும்.

★பிள்ளைகளை இல்லங்களில் தங்க வைத்து தாபன வாரியான வரைமுறைகளுள் அடைத்தல் ஒரு சிலருக்கே நன்மை பயக்கும்.

ஆகவே மிக மோசமாகப் பாதிக்கப் பெற்ற பிள்ளைகளுக்கென அவ்வாறான நடைமுறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஏனையோருக்கு குடும்பம் அல்லது சமுதாயத்தை அடித்தளமாகக் கொண்ட பரிகாரங்களைத் தேடும் முயற்சி தொடரவேண்டும்.

★ பிள்ளை எந்த அளவுக்கு இயல்பான உணர்வை மீளவும் பெறச் செய்ய முடியுமோ அதற்கேற்றவாறாக செயற்திட்டங்கள் அமைதல்வேண்டும்.

ஆலோசனையை மட்டுமே பிரதானமாகக் கொண்ட நடவடிக்கைகள் ஒரு சிலருக்கே பயன்படும். ஏனென்றால் அத்தகைய ஆலோசனைகளை வழங்க ஆற்றலும் பயிற்சியும் பெற்றவர்களுக்கே இயலும். இவர்களைத் தேடியடைதல் சிரமம்.

**செம்மையான நடைமுறைகள்**

1.முன்னர் நிலைபெற்றிருந்த சமூக நல அமைப்புக்களைப் புதுப்பிக்கவும்.

2. உளவியல் சார்ந்த சமூகப் புனரமைப்பு விடயங்களை எல்லாச் செயற்திட்டங்களிலும் சேர்த்துக்கொள்ளவும்.

3.பாடசாலைகளிற் சேருதல், குடும்பக் கடமைகள், சமூக சேவைகள், கலை மற்றும் விளையாட்டுகள் போன்ற வழமையான நடவடிக்கைகளை கூடுமான விரைவில் மீளவும் மேற்கொள்வதன். மூலம் மனவடுக்கள் இயல்பாகக் குணமடைய வழி வகுக்கும்.

4.வளரிளம் பருவத்தினர் மீது விசேட சிரத்தை காண்பிக்கவும். சமுதாயத்தைத் தளமாகக் கொண்ட நிவாரண மற்றும் புனர்நிர்மாண வேலைகளில் அவர்களை ஈடுபடுத்தவும்.

5.பள்ளிப்படிப்பை முடித்து வெளியேறுவோர் தகுந்த வேலைவாய்ப்பைப் பெற ஊக்குவிக்கவும்.

6.படுபாதகமான முறையில் மனவதிர்ச்சிக்கும் அச்சத்துக்கும் உள்ளான பிள்ளைகள், இளைஞர் , யுவதிகள் ஆகியோருக்கு ஆலோசனை வழங்கி ஆதரிக்கவும்.

### மனிதநேயப் பொருள், பண்டங்கள் கிடைக்க வகை செய்தல்

*கொள்கைகள்*

★மனிதநேயப் பொருள், ப்ண்டங்களை எடுத்துச் செல்லுதற்கும், வழங்குவதற்கும் எத்தகைய தடைகளும் இருத்தலாகாது. அந்த நடவடிக்கைகளுக்குத் தகுந்த வசதியளித்தல் வேண்டும்.

★மேற்படி கொள்கைகளுக்குப் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைகள் குறுக்கே நிற்கும் பட்சத்தில் மனிதநேய அக்கறைகளைச் சீர்தூக்குப் பார்க்கும் தகைமை உடையவர்கள் மட்டத்திலே அது விடயம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.



★மனித நேயப்பொருள், பண்டங்கள் குறிக்கப்பட்ட மனிதநேய நோக்கங்களுக்கு மட்டுமே உபயோகிக்கப்பட வேண்டும்.

**செம்மையான நடைமுறைகள்**

1.தடையிலிருந்து விதிவிலக்குப் பெற்ற மனிதநேயப் பொருள், பண்டங்களை மீளாய்வு செய்யவும்.

2.அவை,தேவைப்படும் இடங்களில் இலவசமாகவும் துரிதமாகவும் வழங்கப்படுவதை மேற்பார்க்கவும்.

3.அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல், மனிதநேய முகவரங்களின் விண்ணப்பங்களை கவனத்திற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான அமைப்புக்களை சீராக்கவும்.

4.மனிதநேயப் பொருள்,. பண்டங்களை இலவசமாகவும் துரிதமாகவும் பெறுவதில் இடர் அனுபவிக்கக் கூடிய மக்கள் குழுக்கள் எதிர்நோக்கும் வில்லங்கங்களை. அவதானிக்கவும்.

5.மனிதநேயப் பொருள், பண்டங்களை வழங்கும் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் அவற்றைச் செலவின்றி எடுத்துச் சென்று உடனுக்குடன் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப் பயிற்றவும் .(தொடரும்....)



கட்டைக்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ்.மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில்...

*(படங்கள்: விஷ்ணு, சிவா)*

**அன்பார்ந்த மாணவர்களே!**

**உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகுமதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.**

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை**
**யாழ்ப்பாணம்**

# ராஜீவ் காந்தி அறக்கட்டளை தலைவர் பதவியும் இராஜினாமா!

## சோனியாகாந்தி அறிவிப்பு

(புதுடெல்லி)

பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சனின் மனைவி ஜெயாப்பச்சன் சம்பளம் தரும் இரு பதவிகளில் இருந்ததால் அவரது எம்.பி. பதவி பறிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியும் ஆதாயம் தரும் சில பதவிகள் வகிப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

சோனியா காந்திக்கு எதிராக பாரதீய ஜனதா மற்றும் தெலுங்கு தேசம் கட்சிகள் சார்பில் ஜனாதிபதிடம் மனு கொடுக்கப் பட்டது. உடனே சோனியாகாந்தி தனது எம்.பி பதவியையும் தேசிய ஆலோசனை கமிட்டி தலைவர் பதவியையும் கடந்த மாதம் 23ஆம் திகதி ராஜினாமா செய்தார்.

இதனையடுத்து ரேபரேலி தொகுதியில் மே மாதம் 8ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கவிருக்கிறது. இந்த தேர்தலில் சோனியா காந்தி மீண்டும்போட்டியிடுகிறார்.

இதற்கிடையில் ராஜீவ் காந்தி அறக் கட்டளை உட்பட மேலும் சில அறக்கட்டளை களில் சோனியாகாந்தி பதவியில் நீடிப்ப தாக எதிர்க்கட்சிகள் புகார் கூறிவந்தன. இத னால் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஜாலியன்வாலாபாக் நினைவு அறக்கட் டளையின் தலைவர் பதவியில் இருந்து அவர் விலகினார்.

இந்த நிலையில் சோனியாகாந்தி நேற்று முன்தினம் ராஜீவ் காந்தி அறக்கட்டளை தலைவர் பதவியையும் ராஜினாமா செய் தார்.

ரேபரேலி தொகுதி இடைத்தேர்தலுக் கான வேட்பு மனுத் தாக்கல் இன்னும் 5 நாட்களில் தொடங்க இருக்கிறது.

எனவே வேட்பு மனு தாக்கலின் போது ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் அவர் இந்த முடிவை எடுத்திருக் கலாம் என்று கருதப்படுகிறது. (க)



பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி மேற்கொண்டுள்ள ரத யாத்திரை, குஜராத் மாநிலம் பரோடாவை வந்தடைந்தது. அவரை குஜராத் முதல்வர் நரேந்திரசிங் மோடி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

# அ.தி.மு.க வுக்கு ஆதரவாக நடிகை சிம்ரன் இன்று பிரசாரம் செய்வார்!



(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தல் மே 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. வேட்புமனு தாக்கல் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது.

தேர்தல் பிரசாரத்தில் அனைத்து கட்சி களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

முதல் – அமைச்சர் ஜெயலலிதா மின்னல் வேக சுற்றுப்பயணம் செய்து அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகிறார். வைகோ– திருமாவளவன் ஆகியோரும் பிரசாரத்தில் குதித்துள்ளனர்.

கருணாநிதி இன்று பிரசாரத்தை தொடங் குவார். தான் போட்டியிடும் சேப்பாக்கத்தில் வாக்கு சேகரிப்பார். பின்னர் தமிழகம் முழு வதும் வானில் சென்று ஆதரவு திரட்டுவார்.

அ.தி.மு.க – தி.மு.க கூட்டணி கட்சிக ளுக்கு ஆதரவாக நடிகர்கள் பட்டாளமும் களம் இறங்கியுள்ளது.

பிரபல நடிகை சிம்ரன் சமீபத்தில் ஜெய லலிதாவை சந்தித்து அ.தி.மு.கவில் இணைந் தார். அவர் தேர்தல் பிரசாரத்திலும் ஈடு படுகிறார். சென்னையில் இன்று பிரசா ரத்தை தொடங்குவார்.

ஆர்.கே.தொகுதியில் உள்ள தண்டை யார் பேட்டையில் மாலை 6 மணிக்கு அ.தி. மு.க வேட்பாளர் பி.கே. சேகர்பாவுவை ஆதரித்து வாக்கு கேட்பார். அங்கு நடக்கும் பொதுக்கூட்டத்திலும் பங்கேற்று பேசுவார்.

அவருடன் நடிகைகள் விந்தியா, கோவை சரளா, நடன இயக்குனர் ரகுராம், கவிஞர் சினேகன் ஆகியோரும் அ.தி.மு.க வுக்கு ஆதரவு திரட்டுவார்கள்.

பின்னர் சிம்ரன் தமிழகம் முழுவதும் சுற் றுப்பயணம் செய்து அ.தி.மு.க கூட்டணி வேட் பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வார். நடிகர் ராமராஜனும் பிரசாரத்தில் குதிக்கவுள்ளார். (க)

# மனிஷா கொய்ராலாவின் செயலாளரை கொன்ற அபுசலீம் கூட்டாளி ஜெயிலில் இருந்து தப்பினான்

(மும்பை)

பிரபல நடிகை மனிஷா கொய்ராலா. இவரது செயலாளர் அஜித்தேவானியை கடந்த 2001ஆம் ஆண்டு 3 பேர் கொண்ட கும்பல் ஒன்று துப்பாக்கியால் சுட்டுக் கொன்றது.

மும்பை குண்டுவெடிப்பு சதிகாரன் அபு சலீம் தான் தனது ஆட்களை ஏவி மனிஷா கொய்ராலா செயலாளரைக் கொன்றது தெரியவந்தது.

போர்த்துக்கல் நாட்டில் பதுங்கி இருந்த அவனையும் அவனது காதலி மோனிகா பேடியையும் சி.பி.ஐ. இந்தியா கொண்டு வந் தனர்.

குண்டு வெடிப்பு உட்பட பல வழக்குகள் தொடர்பாக அபுசலீம் வாக்குமூலம் அளித் துள்ளான். அப்போது மனிஷா கொய்ராலா சொன்னதன் பேரில் அவரது உதவியாளரை கொன்றதாகவும் இருவருக்கும் இடையே பணத்தகராறு இருந்ததால் கொல்ல சொன்னதாகவும் தெரிவித்து இருந்தான். இது பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

மனிஷா கொய்ராலா செயலாளர் அஜீத் தேவானி கொலை தொடர்பாக அபுசலீம் கூட்டாளிகள் 3 பேர் ஏற்கனவே கைதாகி ஜெயிலில் உள்ளனர்.

இந்த கொலை வழக்கில் அபுசலீமுக்கு அடுத்து முக்கிய குற்றவாளி தீபக்சிங் என்ற தீபு. உத்தர பிரதேசம் மாநிலத்தி லும் இவன் மீது பல வழக்குகள் இருந் தது. இதனால் மும்பை கோர்ட்டில் வேண்டு கோள் விடுத்து உத்தரபிரதேசத்துக்கு அம் மாநில பொலிஸார் கொண்டு வந்தனர்.

வாரணாசி ஜெயிலில் அடைக்கப்பட்டு இருந்த தீபு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டான். அவன் கடந்த சில தினங்களுக்கு முன்பே தப்பி ஓடியதை உத்தர பிரதேச பொலிஸார் இப்போதுதான் தெரிவிக்கின்றனர்.

தீபு தப்பி ஓடியதை வாரணாசி பொலி ஸார் மும்பை கோர்ட்டில் தெரிவித்து விட்ட னர்.

மனிஷா கொய்ராலா செயலாளர் கொலை செய்யப்பட்ட வழக்கில் பொலிஸார் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கிறார்கள். அபுசலீம் உட்பட 6 பேர் மீது குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்படுகிறது.

குற்றப்பத்திரிகை இன்று தாக்கல் செய் யப்படஇருப்பதால் தான் அபுசலீம் கூட் டாளி ஜெயிலில் இருந்து தப்பி ஓடியதை உத்தரபிரதேச பொலிஸார் தற்போது வெளி யிட்டுள்ளனர். இதனால் குற்றப்பத்திரிகை இன்று தாக்கல் செய்ய இயலாது எனவும் சிலர் கூறுகின்றனர். (க)

இந்திய வலம்

# அலிகார் கலவரம் உமாபாரதி கைது

(புலாந்த்சாகர்)

உத்தரபிரசேத மாநிலம் அலிகாரில் ராமநவமி விழாவையொட்டி போடப்பட்டு இருந்த தோரணங்களை அகற்றியது தொடர்பாக இரு பிரிவினர் இடையே கலவரம் ஏற்பட்டது. இதில் 6 பேர் பலியானார்கள்.

கட்டுப்படுத்தப்பட்டு இருந்த கலவரம் தற்போது மீண்டும் தலைதூக்க தொடங்கி யுள்ளது. நேற்றுமுன்தினம் அலிகாரில் புதிய கலவரம் ஏற்பட்டது.

பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் காயம் அடைந்தார். அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. ஊரடங்கு உத்தரவு போடப்பட்டுள்ளது. 2 கம்பெனி மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் கூடு தலாக பாதுகாப்பில் உள்ளனர்.

கலவரம் நடைபெறுவதால் அலிகார் நக ருக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களை பாரதீய ஜனதாவில் இருந்து நீக்கப்பட்ட உமாபாரதி சந்தித்து ஆறுதல் கூறநினைத்தார்.

இதற்காக அலிகார் நகருக்கு செல்ல முயன்றார். புலாந்த் சாகர் பகுதியில் அவரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இதேபோல் கலவரத்தால் பாதிக்கப்பட்ட அலிகார் நகருக்கு செல்ல முயன்ற டெல்லி ஜும்மா மசூதி இமாம் செய்யது முகமது புகாரி ஏற்கனவே கைதுசெய்யப்பட்டார். (க)




கொல்கத்தாவில் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் மார்க்ரேட் ஆல்வா கூட்டாக இணைந்து வெளியிட்டனர்.

## ஜெயலலிதாவுடன் சந்திப்பு

# விபரம் வெளியிட்டால் இன்னுமொரு குண்டு வெடிக்கும் - நடிகர் கார்த்திக்

(சென்னை)

முதல்வர் ஜெயலலிதாவை தான் சந்தித்த விவரம் குறித்து வெளியிட்டால் இன்னொரு குண்டு வெடிக்கும் என்று பார்வர்டு பிளாக் கட்சியின் மாநிலத் தலை வரும் நடிகருமான கார்த்திக் கூறினார்.

சென்னையில் நேற்று முன்தினம் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

அண்மையில் நானும் எங்கள் கட்சி யின் தலைவர் பிஸ்வாஜும் தி.மு.க தலை வர் கருணாநிதியைச் சந்தித்தோம். அதில் அவரின் உடல் நலம் குறித்தும் மத்திய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு குறித் தும் மட்டுமே விசாரித்தோம். தேர்தல் கூட் டணி குறித்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

ஆனால் இச்சந்திப்பை சந்தானம் தவ றாகப் பிரசாரம் செய்தார்.

உடனடியாக முதல்வர் ஜெயலலிதா வைச் சந்தித்தேன். ஆனால் அச்சந்திப்பு விவரம் குறித்து வெளியிட முடியாது. வெளி யிட்டால் தமிழகத்தில் இன்னொரு குண்டு வெடிக்கும்.

தேர்தலா? போரா? தமிழகத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறுகிறதா? இல்லை போர் எதுவும் நடைபெறுகிறதா? என்று எண்ணும் வகையில் தூத்துக்குடி குண்டுவெடிப்பு சம்பவம் அமைந்துள்ளது.

தேர்தலில் யாரையும் எதிரியாக நான் நினைக்கவில்லை. அதேபோல் என் கட்சி வேட்பாளர்களையும் பிறரை வரம்பு மீறி விமர்சிக்கக்கூடாது என்று கட்டளையிட் டுள்ளதாக தெரிவித்தார் கார்த்திக். (க)

# மத்திய பிரதேசத்தில் 'அந்திராக்ஸ்'

## 31 மாடுகள் பலி; பறவைக் காய்ச்சலும் பரவுகிறது

(போபால்)

இப்போது பறவைக் காய்ச்சல் உலகம் முழுவதும் அச்சுறுத்திவருவது போல முன்பு அந்திராக்ஸ் நோய் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இது தாக்கி உலகம் முழு வதும் பல்லாயிரக்கணக்கான மாடுகள் உயிரிழந்தன. பின்னர் நோய் கட்டுப் படுத்தப்பட்டது.

இந்த நிலையில் மத்திய பிரதேச மாநி லம் நரசிங்கபூர் மாவட்டத்தில் அந்திராக்ஸ் நோய் பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

அங்குள்ள கார்தஜ் என்ற இடத்தில் 31 மாடுகள் திடீரென செத்து விழுந்தன. அவற்றைப் பரிசோதித்துப் பார்த்தபோது அவற்றை அந்திராக்ஸ் கிருமி தாக்கி இருந் தது தெரிந்தது.

மேலும் நோய் பரவாமல் தடுக்க கால் நடை பராமரிப்பு துறையினர் தீவிர நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு பக்கம் அந்திராக்ஸ் நோய் தாக்கி வரும் அதேநேரத்தில் அங்குள்ள புர்கான் பூர் மாவட்டத்தில் பறவைக் காய்ச்சல் ஏற் பட்டுள்ளது. 5 கிராமங்களில் பறவைக் காய்ச்சல் பரவி இருப்பதை கண்டுபிடித்து 1000 கோழிகளை அழித்துள்ளனர். பற வைக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையும் தீவிரமாக்கப்பட்டுள்ளது. (க)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## தோமஸ் அல்வா எடிசன்



விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் பற்றி நீங்கள் அறியாதது ஒன்றும் இல்லை. அந்தவிஞ்ஞான மாமேதையின் குழந்தைப் பருவ வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு வேடிக்கையான நிகழ்ச்சிபற்றிப் பார்ப்போம்.

தோமஸ் அல்வா எடிசன் சிறுவனாக இருந்தபோது வீட்டில் சின்னஞ்சிறு சோதனைச் சாலை ஒன்றை ஏற்படுத்தி வைத்திருந்தார். அந்தச் சோதனைச் சாலையில் காட்சி தரும் பலவித மான கருவிகளையும் பாத்திரங்களையும் கண்டு எடிசனுடைய பெற்றோருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு தடவை சிறுவன் எடிசன் தன் ஆராய்ச்சியின் மூலமாக ஒரு விஷயத்தைத் தெரிந்துகொண்டான். எஸட்லிஜ் என்னும் உப்பை இரசாயன முறையில் கரைத்து அதன்மூலம் எழும் ஆவியை மெல்லிய ஒரு பொருளில் கசியாமல் அடைத்தால் அந்தப் பொருள் வானத்தை நோக்கி மேலெழும்பிச் செல்லும் என்பதுதான் எடிசன் தெரிந்து கொண்ட உண்மை. இந்தச் சோதனையை ஒரு மனிதன் விஷயத்தில் பயன்படுத்தினால் ஒருக்கால் அந்த மனிதன் ஆகாயத்தில் எழும்பி காற்றில் மிதந்து செல்லக்கூடும் என்று சிறுவன் எடிசன் நினைத்தான்.

இந்த விஷயத்தைச் சோதனை செய்துபார்ப்பதற்கு தன்னுடைய வீட்டு வேலைக்காரனைப் பயன்படுத்திக் கொண்டான். எஸட்லிஜ் என்ற உப்பைக் கரைத்து வேலைக்காரனிடம் கொடுத்து அவனை வயிறு முட்டக் குடிக்கச் செய்தான்.

அதன்விளைவாக வேலைக்காரன் ஆகாயத்தில் பறக்கவில்லை. பூவுலகத்தைவிட்டு பரலோகத்திற்கே செல்லும் நிலையை அடைந்துவிட்டான். அவனைப் பிழைக்கவைக்க பெரும்பாடுபட வேண்டி வந்துவிட்டது. இப்படி சிறுவயதில் இருந்தே ஆராய்ச்சிகள் செய்துவந்த இவர் பின்னாளில் எத்தனையோ அரிய பொருட்களைக் கண்டுபிடித்து நாம் இன்று பயன்படும்படிச் செய்துவிட்டார்.

## அகந்தை அழிவு தரும்

விதுராபுரி என்ற தேசத்தில் அபிஜித் என்ற வீரன் இருந்தான். அபிஜித்என்றபெயருக்கு வெற்றிகரமானவன் என்று பொருள். எல்லா விஷயத்திலும் தன் மகன் வெற்றி பெற வேண்டும் என்ற ஆசையில் அவன் தாயார் அவனுக்கு இந்தப் பெயரை சூட்டினாள். அந்தப் பகுதியை சேர்ந்த ஜமீன்தார் ஒருவர் குதிரை ஒன்றினை வளர்த்து வந்தார். அது முரட்டுத்தனம் கொண்ட குதிரை. அந்த குதிரையை யார் அடக்குகின்றார்களோ அவர்களுக்கு ஏராளமான வெகுமதிகள் கிடைக்கும் என்று அவர் அறிவித்தார்.



ஜமீன்தாரின் குதிரையை அடக்க ஏராளமான வீரர்கள் திரண்டு வந்தனர். ஆனால், யாராலுமே அந்தக் குதிரையை அடக்க முடியவில்லை. எல்லாருமே குதிரையின் தாக்குதலுக்கு ஆளானார்கள். ஒரு சிலர் அந்தக் குதிரையின் முரட்டுத் தாக்குதல் காரணமாக உயிரை இழந்தனர். இதன் காரணமாக அந்த ஜமீன்தார் மிகவும் ஆணவம் கொண்டார்.

'இந்த உலகத்தில் நம்முடைய குதிரையை யாராலுமே அடக்க முடியாது' என்று மனதுள் நினைத்தார். ஜமீன்தாருக்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவள் தனது தந்தையை விடவும் தலைக்கனம் மிக்கவளாக இருந்தாள். அழகி என்ற திமிர் வேறு.

ஒருநாள் வீரன் அபிஜித் ஜமீன்தாரின் ஊருக்கு வந்தான். அந்த நேரத்தில் ஜமீன்தாரும், அவள் மகளும் வீட்டின் மேல் மாடியில் பேசிக் கொண்டிருப்பது கீழே நடந்து சென்ற அவன் காதுகளில் விழுந்தது.

''தந்தையே! இந்த உலகில் எல்லாருமே கோழைகள் போலும். வீரன் ஒருவனும் இல்லை. அதனால்தான் நம் குதிரையை யாரும் அடக்க முடியவில்லை'' என்றாள் ஜமீன்தாரின் மகள்.

''ஆமாம் மகளே! நான் வளர்த்த குதிரையை யாராலும் அடக்க முடியாது. அதே நேரத்தில் உன்னைப் போன்ற அழகான பெண் இந்த உலகத்தில் வேறு எங்குமே இருக்க முடியாது... உனக்கேற்ற அழகனை நான் எங்கு போய் தேடுவது?'' என்றார். அதனைக் கேட்டதும் ஜமீன்தாரின் மகள் மிகவும் கர்வம் கொண்டாள். மேலே நடப்பதையெல்லாம் கீழே நின்றபடி கவனித்தான் வீரன் அபிஜித். கீழே நின்றபடியே மாடியை நோக்கி ஜமீன் தாரை அழைத்தான்.

''ஜமீன்தாரே! உமது குதிரையை நான் அடக்குகின்றேன். குதிரையை அடக்கினால் நீர் எனக்கு என்ன கொடுப்பீர்?'' என்று கேட்டான். ஜமீன்தாரும், அவர் மகளும் கீழே நிற்கின்ற அபிஜித்தை உற்று நோக்கினர். அபிஜித் பார்ப்பதற்கு கறுப்பாக அழகற்றவனாக இருந்தான். ஆனால், திடகாத்திரமான உடல் வளத்தோடு காணப்பட்டான். ஜமீன்தாரின் மகளோ அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே அருவருப்படைந்தாள். கறுப்பு என்பது அவளுக்கு பிடிக்காத நிறம்.

''தந்தையே! இவனைப் பார்க்கவே எனக்கு அருவருப்பாக இருக்கின்றது. இவனா நம் குதிரையை அடக்கப் போகிறான்?'' என்று கேட்டாள்.

''மகளே! இவனால் நம் குதிரையை அடக்க முடியாது. இருந்தாலும் இவன் தானாகவே குதிரையை அடக்க முன் வருகின்றான். எனவே, நம் குதிரையால் அவன் உயிரை விடப் போவதை நாம் தடுக்க வேண்டாம்!'' என்று கூறியபடியே அவர் கீழே பார்த்தார்.

''நீ என் குதிரையை மட்டும் அடக்கிவிட்டால் நீ என்ன கேட்டாலும் தர தயாராகயிருக் கின்றேன்'' என்றார் ஜமீன்தார்.

''அப்படியானால் இப்போதே குதிரையை அடக்க ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான் வீரன். உடனேயே ஜமீன்தார் அனைவரையும் அழைத்து குதிரையை அடக்கும் விழாவிற்கு ஏற்பாடு செய்தார்.

வீரன் எப்படி குதிரையை அடக்கப் போகிறான் என்பதைக் காணும் ஆவலில் அங்கே ஏராளமானவர்கள் வந்திருந்தனர்.

வீரனோ சிறிதும் பயமில்லாமல் எளிதாக குதிரையை அடக்கினான். பின்னர் கம்பீரத்தோடு ஜமீன்தாரை நோக்கினான்.

''ஜமீன்தாரே! நான் குதிரையை அடக்கிவிட்டேன். இப்போது நான் என்ன கேட்கின்றேனோ அதனை நீர் எமக்கு கொடுக்க வேண்டும்'' என் றான்.

''வீரனே நீ முதலில் தெரிவித்த நிபந்தனையை நான் மீறவில்லை. நீ என்ன கேட்க நினைக்கின்றாயோ அதனைக் கேள்'' என்றார் ஜமீன்தார்.

''ஜமீன்தாரே! உமது மகளை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன். உமது மகளைத் தான் எனக்குப் பரிசாகத் தர வேண்டும்'' என்றான்வீரன்.

ஜமீன்தாரோ இதனைக் கேட்டதும் திடுக்கிட்டார். பின் வேறு வழியில்லாமல் தன் மகளை வீரனிடம் ஒப்படைத்தார்.

ஜமீன்தாரின் மகளோ தனது கர்வத்தால் தனக்கு இந்த நிலை ஏற்பட்டுவிட்டதே என்று மனம் வருந்தினாள். சற்று நேரத்திற்கு முன்னர் தான் நாம் இந்த வீரனை அருவருப்பானவன் என்று மனதுள் எண்ணினோம். ஆனால், இப்போது இந்த வீரனே நமக்கு மணவாளனாகி விட் டான். இது என் கர்வத்தை அடக்க இறைவன் போட்ட திட்டம் என எண்ணி மனம் நொந்தாள். ஆணவம் அடங்க இப்படியொரு சந்தர்ப்பம் அமைந்துவிட்டதென மனதுள் நினைத்தாள். வீரனோ மகிழ்ச்சி யுடன் ஜமீன்தாரின் வாரிசானான்.

சிறுவர்களே!

அழிவுக்கு முன்னானது அகந்தை என்பதை மறந்து விடாதீர்கள்.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்தபட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?





## உங்களுக்குத் தெரியுமா?

* விலங்குகளில் உரத்த குரலில் ஒலி எழுப்புவது ஹௌலர் என்ற குரங்காகும்.
* இரு நுரையீரல்களிலும் வலது நுரையீரலே பெரியதாகும்.
* ரொக்கெட்டின் வேகம் சுமார் 40000 கிலோ மீற்றர் ஆகும்.
* நம் உடலில் உள்ள இரத்தத்தில் 2500 கோடி இரத்த அணுக்கள் உள்ளன.
* கழுகு எதையும் கொன்று தின்பதில்லை.



### விடைகள்

கண்டுபிடியுங்கள்

1.பின்னல் 2.தலையில் பூ
3.ரிபன் 4.வளையல்
5.கொலுசு 6.தட்டு
7.நாயின் கழுத்துப் பட்டி

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை



### தாங்குமிடம் தேடி

12

ரீஜண்டின் மறைவுக்கு முன் சோசா இனத்தவர் ஜஸ்டிஸ் தந்தையிடம் திரும்பிச் செல்ல வேண்டும் என ஒரு வழக் கைத் தொடர்ந்தனர். அதில் ஜஸ்டிசுக்காக மண்டேலா வாதா டினார். அவருக்கு வயதுவந்து மேஜராகி விட்டதால் சுய முடிவை எடுக்க உரிமையுண்டு என வாதாடினார். ஆனால் வழக்குப் போட்ட போங்கின் டோபோ சட்டநுணுக்கங்கள் விதிகளை விடுத்து நேராக மண்டேலாவைப் பார்த்துப் பேசினார்.

ரீஜண்ட் தனக்குப்பிறகு ஜஸ்டிஸ் பொறுப்பு ஏற்க வேண்டும் என விரும்பினார். மண்டேலா அவருக்கு நல்ல ஆலோசகராக இருக்கவேண்டும் என அவரைப் படிக்க வைத்தார். இருவரும் தந்தைக்குத் தந்த வாக்குறுதியை மீறலாமா? எனக் கேட்டார்.

இரவு பூராவும் மண்டேலாவுக்கு தூக்கம் வரவில்லை. மறுநாள் ஜஸ்டிசைச் சந்தித்து டிரான் ஸ்கீய்க்குத் திரும்பிப்போய் தந்தையின் பொறுப்பை ஏற்பதே சரி என வற்புறுத்தினார். இதை ஜஸ்டிஸ் தன் காதலியிடம் கூறிவிட்டார் போலும் அவர் மண்டேலாவுடன் பேசுவதை நிறுத்தி விட்டாள்.

ஜஸ்டிஸ் டிரான்ஸ்கீய்க்குத் திரும்பிச் சென்று பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் மண்டேலா தான் தேர்ந்தெடுத்த பாதையில் நடக்க ஜோகன்ஸ்பர்க் திரும்பினார்.

பெர்ஸ்டைல் என்பவர் சுரங்கப் பகுதியிலிருந்த ஒரு வீட்டில் இலவசமாக மண்டேலா தங்க ஏற்பாடு செய்து கொடுத்தார். இந்தப் பகுதியில் தென்னாபிரிக்க நாட்டின் சகல இன நாட்டு மக்களும் கலந்துவாழ்ந்து வந்தனர். அது ஒரு குட்டி தென்னாபிரிக்காவாகக் காட்சி தந்தது. இங்கு தங்கியிருந்த போது தென்னாபிரிக்காவிலிருந்த பல நாட்டு மன்னர் மகாராணிகள், ஆட்சியாளர்கள் அங்கு வந்து தங்குவது வழக்கம். ஒருமுறை லெசாதோ நாட்டு ராணி வந்திருந்தார்.

அவர் லெசாதோ மொழியில் பேசியது மண்டேலாவுக்குப் புரியவில்லை. சொந்த மக்கள் பேசும் மொழி புரியாமல் எப்படி வழக்குகளை நடத்தப் போகிறாய்? எனராணி கேட்டார். மக்கள் பேசும் மொழியைக் கற்பது அவசியம் என மண்டேலா உணரத் தொடங்கினார்.

1942 இல் பி. ஏ பட்டத் தேர்வில் முதலிடத்தில் மண்டேலா தேறினார். அது மகத்தான சாதனையாகத் தெரிந்தது. பாராட்டிய கவுர் ராடபே பட்டம் நல்லதுதான் படிக்க வேண்டியது அவசியமே. ஆனால் இதன் மூலம் நாடும் மக்களும் விடுதலை பெற ஆயிரம் ஆண்டுகள் பிடிக்கும். கொள்கை, தத்துவங்களைப் பேசினால் போதாது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என கவுர் கூறி வந்தார். ஆனால் அவர் புரட்சியைப் பற்றி மட்டுமே சிந்திப்பவராக இருந்தார் என்பது தெரியவந்தது.

1943இல் ஹாரே கோட்டைக்கு பட்டத்தைப் பெற மண்டேலா புறப்பட இருந்தார். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் சிசுலு அவர்களிடம் கடனாகப் பணம் பெற்று புதிய கோட்டும் பேண்டும் வாங்கிக்கொண்டார். உறவினர் மாட்டானிசிமா பல ஆண்டுகளுக்கு முன்னர் பட்டம் பெற்றவர். அவர் மண்டேலாவின் அம்மாவையும் ரீஜண்டின் விதவையையும் தன் காரில் அழைத்துக்கொண்டு வந்திருந்தார். ரீஜண்டின் விதவை பெயர் நோ இங்கிலாந்து. அவர் வந்தது ரீஜண்டே வந்து வாழ்த்தியது போல இருந்தது. அவர்களுடன் ஒரு வாரம் அங்கு தங்கியிருந்தார். அங்கேயே தங்கி விட யோசனை கூறப்பட்டது. அதை மறுத்து விட்டு ஜோகன்ஸ்பர்க் திரும்பினார் மண்டேலா.

கவுரும், வால்டரும் நண்பர்களாக அவருக்குத் தந்த போதனைகள் ஒரு புறம் அதைவிட தன் குடும்பம், தன் இனம், தன் குழு எனப் பாராழல் ஆபிரிக்க மக்கள் அனைவரின் விடுதலைக்காகவும் பாடுபட வேண்டும் என மனம் நாடியது.

1943-இல் வழக்குரைஞராக ஆவதற்காக விட் பல்கலைக்கழகத்தில் மண்டேலா சேர்ந்தார். மண்டேலாவைத் தவிர மற்ற மாணவர்கள் அனைவரும் வெள்ளையர் பல்கலைக் கழகத்தில் பரந்த மனப்பான்மை இருப்பதாகப் பேசிக்கொண்டாலும் அங்கும் நிறவெறி காட்டப்பட்டது. மண்டேலா அருகில் மாணவர்கள் உட்காராமல் எழுந்து போய் விடுவார்கள். பேராசிரியர் ஹாலோ சட்டம் கற்பித்தவர். ஆனால் ஆபிரிக்கர்களுக்கும் பெண்களுக்கும் சட்டம் ஒத்து வராது என்பார். இவர்கள் மத்தியில் ஜோஸ்லோவோ என்ற வெள்ளை நிறத்து யூதர் இருந்தார். இவர் பின்னர் மணந்து கொண்ட ருத்பர்ஸ்ட் என்பவரும் படித்துவந்தார். இவர்கள் இருவரும் நிறவெறி என்பதையே தெரியாதவர்களாக மிகுந்த தோழமையோடு பழகி வந்தனர். ருத்தாராள மனப்பான்மைக் கட்சிக்காரர்.ஜோஸ்லோவோ கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். இவர் மிகக் கூர்மையாக வாதிடுவதில் வல்லவர் .எவ்வித வேறுபாடும் இல்லாமல் மனிதனோடு மனிதனாகப் பழகி வந்தார். பிராம் பிசர் புகழ்மிக்கஒரு பெருங் குடும்பத்திலிருந்து வந்தவர். அவர் அங்கு விரிவுரையாளராக இருந்தார். ஆரஞ்சு மாநிலத்தின் குடியரசுத் தலைவராக இருந்தவரின் மகள். அவர் விரும்பியிருந்தால் தென்னாபிரிக்காவின் பிரதமர் ஆகியிருக்கலாம். அதை விடுத்து நிறவெறியை எதிர்க்கும் விடுதலை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். ஓ டிவுட், ஹரால்டு ஒல்பே ஆகியோரும் நண்பர்கள் ஆகினர். அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள். யூதர்கள் நட்புப் படை பெருத்தது.

### இந்தியர்களுடன்

விட்ஸ் பல்கலைக்கழகத்தில் பயின்று வந்த இந்திய மாணவர்களில் இஸ்மாயில் மீர், ஜே. என். சிங் அகமது பூலா, ராம்லால் பூலியா ஆகியோர் நண்பர்கள் ஆயினர். இஸ்மாயில் மீரரின் வீடு நான்கு அறைகளைக் கொண்டது. நகரின் நடுவில் இருந்தது. இங்குதான் நண்பர்கள் கூடி ஆடிப்பாடி விருந்துண்டு மகிழ்வது வழக்கம். ஒரு நாள் ரயிலில் பயணம் செய்தபோது இந்தியர்களுக்கு மட்டும் என்ற பெட்டியில் மண்டேலாவையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். டிக் கட் பரிசோதகர் இந்த "கவீர்"இங்கே எப்படி வந்தார்? என்று அசட்டையாகக் கேட்டார். மீரும் சிங்கும் என்ன சொன்னாய் எனச் சீறி பரிசோதகருடன் மோதியதோடு இறக்கி விடவும் மறுத்து விட்டனர். ஆனால் பரிசோதகர் ரயிலை நிறுத்தி காவல்துறையினரை அழைத்து அவர்களைக் கைதுசெய்ய வைத்தார்.

மறுநாள் நீதிமன்றத்தில் இந்திய மாணவர்களுடன் மண்டேலாவும் நின்றார். புகழ் மிக்க குடும்பத்தில் வந்த சட்டக்கல்லூரி விரிவுரையாளர் பிராம் பிசர் இவர்களுக்காக வாதிட நீதி மன்றத்திற்கு வந்தார். அவரைக் கண்டவுடன் நீதிபதியின் முகம் மாறி விட்டது. பிராம் பிசர் எழுவதற்குள் அவர்களை விடுவித்து விட்டதாக நீதிபதி அறிவித்துவிட்டார். இந்திய மாணவர்கள் அனைவரும் கம்யூனிஸ்டுக் கட்சியிலும் ஆபிரிக்கக் காங்கிரசிலும் உறுப்பினர்களாக இருந்தனர்.

அந்தக் காலத்தில் மண்டேலா வயதிலிருந்த இந்தியர்கள் வெள்ளையர் சிலர் ஆபிரிக்க மக்கள் எல்லோரும் நாட்டின் விடுதலை மக்களின் விடுதைலக்காக தங்களது சுக போகங்களை தாக்கி எறிபவர்களாகவே இருந்தனர்.

(தொடரும்)

## தவக்கால சிந்தனை



### ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு

போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும். புதிய பாதை அமைத்து இறை அரசை நிலை நாட்ட வந்த இயேசுவின் பாதங்களுக்கு மணம் கமழும் பரிமளத்தைலம் பூசுகிறாள் மரியா! மரியாளின் இந்த அன்புச்செயல் இயேசுவுக்கு வர இருக்கும் துயர நாட்களுக்கு ஒரு முன் குறியா கியது. துன்ப நேரத்தில் அருகிலிருந்து சவால் களை சந்திக்க தட்டிக்கொடுத்து வழி அனுப் புபவன்தான் உண்மை நண்பன். இயேசுவின் மனம் துன்புற்றவேளையில் அவரது உற்ற நண்பர் களாகிய மார்த்தா, மரியாள், இலாசர் இவர்களின் நட்பின் விருந்தும் நறுமணத் தைலப்பூச்சும் இயேசுவுக்கு ஆறுதல் தரு கின்றன. நாமும் மற்றவர்களோடு உறவை வளர்த்து உறவை கொண்டாடுகிறோம். ஆனால் அவர்களின் உள்ளுணர்வை புரிந்து செயல் பட முயற்சி செய்திருக்கின்றோமா?

காவலன்


அமரர் திரு.சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக

புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்

இணைந்து நடாத்தும் மாவட்ட

கரப்பந்தாட்டச் (செற்-அப்) சுற்றுப்போட்டி-2006

பங்குபற்றும் கழகங்கள்

A பிரிவு
01.மத்திய வி.க.(ஆவரங்கால்)
02.வளர்மதி வி.க.(மட்டுவில்)
03.விக்னேஸ்வரா வி.க.(B) (அச்சுவேலி)

B பிரிவு
01.இந்து இளைஞர் வி.க.(ஆவரங்கால்)
02.கலைமதி வி.க.(B) (புத்தூர்)
03.ஐக்கிய வி.க.(காங்கேசன்துறை)

C பிரிவு
01.விக்னேஸ்வரா வி.க.(A ) அச்சுவேலி
02.பாரதி வி.க.(நாயன்மார்கட்டு)
03.மோகனதாஸ் வி.க (மட்டுவில்)

D பிரிவு
01.ஐக்கிய விளையாட்டுக் கழகம் (அரியாலை)
02.கலைமதி வி.க.(A) (புத்தூர்)
03.அண்ணா வி.க (தொண்டமனாறு)

கால அட்டவணை

10.04.2006 பி. ப. 4. 00 வளர்மதி வி.க. எதிர் விக்னேஸ்வரா வி.க.( B)
பி.ப 445 இந்து இளைஞர் வி.க. எதிர் கலைமதி வி.க.(B)

குறிப்பு:- போட்டியின் இறுதியில் புள்ளி அடிப்படையில வெற்றி பெற்ற இரண்டு கழகங்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப் படும். இறுதிப்போட்டி பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

போட்டிகள் யாவும் வீனஸ் வி.க.மைதானத்தில் நடைபெறும்

ஊடக அனுசரணை : வலம்புரி-சங்குநாதம்


## வண்ணை நகர் உறைபவனே! தேரேறி வருக!

### இன்று யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் பஞ்சரத பவனி

வண்ணை நகருறைகின்ற சிவனே தேரேறி வருக
வையமெல்லாம் தொழவே சிவனே தேரேறி வருக
எண்ணியதைத் தருகின்ற ஈசனே தேரேறி வருக
ஈழவரின் வாழ்வுக்கு வழிகாட்ட தேரேறி வருக!
விண்ணவர்கள் போற்றிடவே தேரேறி வருக
வேண்டும் வரமருள்பவனே தேரேறி வருக
உன் கழலிணை பற்றினோம் தேரேறி வருக
உரிமையெல்லாம் தந்தெமைக்காக்க தேரேறி வருக!
நின் கோவில் வலம் வந்து வடம் பிடிக்க தேரேறி வருக
நிரந்தரமானதோர் தீர்வுக்கு வழிகாட்ட தேரேறி வருக
பொன்னார் மேனியனே சிவனே தேரேறி வருக
புவனமெல்லாம் ஆளும் நாயகனே தேரேறி வருக!
அன்னை வாலாம்பிகை சகிதமாய் தேரேறி வருக
அழகமர்ந்த யாழ்நகரில் தேரேறி வருக
மண்ணையுண்டவாயன் மைத்துனனே! தேரேறி வருக
மானியத்தோர் ஆட்சி நலம் சேர்க்க தேரேறி வருக

மதுரகவி
காரை எம். பி. அருளானந்தன்

## தேர்த் திருவிழா

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10மணிக்கு தேர்த் திருவிழாவும் அன்று மாலை 2 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (சு-29)

# நேபாளத்தில் மாவோயிஸ்ட்டுகள் தாக்குதல்

## 19 பேர் பலி; பல இடங்களில் ஊரடங்கு அமுல்

நேபாளத்தில் மாவோயிஸ்ட்டுகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே நடந்த வெவ்வேறு மோதல்களில் 19பேர் பலியாயினர். நாடு முழுவதும் பதட்டம் நிலவுவதால் பல இடங்களில் ஊரடங்கு உத்தரவு. அமுல்படுத்தப்பட்டுள்ளது. போராட்டக்காரர்



களை கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு எதிரான போராட்டம் வலுப்பதால் மொபைல் போன் சேவையும் துண்டிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தில் ஞானேந்திரா தலைமையிலான மன்னராட்சி நடந்துவருகிறது.

மன்னராட்சியை அகற்றி விட்டு ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என ஏழு முக்கிய அரசியல்கட்சிகள் கூட்டணி அமைத்து நாடு முழுவதும் பல்வேறு போராட்டங்களை நடத்திவருகின்றன. மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகளும் அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஆதரித்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஜனநாயக ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தக் கோரி கடந்த 6ஆம் திகதி முதல் பொது வேலை நிறுத்தமும் நடத்தப்பட்டுவருகிறது. முன் எச்சரிக்கை நடவடிக்கையாக அரசியல் கட்சி தலைவர்கள் பத்திரிகையாளர்கள் உட்பட ஆயிரத்து 200க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேபாள அரசின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா போன்ற நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மேற்கு நேபாளத்தில் அரசு அலுவலகங்கள், காவல்நிலையங்கள் ஆகியவற்றின் மீது மாவேயிஸ்ட்டு தீவிரவாதிகள் கடுமையான தாக்குதல் நடத்தினர்.

புத்வால் என்ற இடத்தில் பெரும் திரளான மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தினர். பாதுகாப்பு படையினருக் கும் மாவேயிஸ்ட்டு தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. இதில் ஏழு மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகள் பலியாயினர். இந்தச் சம்பவத்தில் பொது மக்கள் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார். பாதுகாப்பு படையினர் இருவர் உட்பட மேலும் ஏழுபேர் படுகாயமடைந்தனர். கோல்பார்க்கில் உள்ள பொலிஸ் பயிற்சி மையம் மீதும் மாவேயிஸ்ட்டுகள் தாக்குதல் நடத்தினர்.



கபிலவஸ்து மாவட்டத்தில் உள்ள தவு லிஹுவா என்ற பகுதியிலும் மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். மாவட்ட பொலிஸ் அலுவலகம் மாவட்ட சிறை, வனத் துறை அலுவலகம் ஆகியவற்றை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. மாவோ யிஸ்ட்டுகளுக்கும், பாதுகாப்புப்படையின ருக்கும் இடையே கடும் துப்பா கிச் சண்டை நடந்தது.

ஆறு மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகளும் நான்கு பாதுகாப்புப் படையினரும் கொல்லப்பட்டனர். இந்தசம்பவத்தில் அந்தபகுதியை சேர்ந்த ஒருவரும் பலியானார். மாவட்ட சிறையில் நடத்த தாக்குலில் அங்கு அடைக்கப்பட்டிருந்த 104 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.பல அரசு அலுவலகங்கள் மீதும் மாவோயிஸ்ட்டுகள் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின. (க)



நேபாள தலைநகர் காத்மண்டுவில் மன்னர் ஞானேந்திராவை எதிர்த்து மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் அவரது உருவப்படத்தை தீயிட்டு கொளுத்தினர்.

# அமெரிக்காவை மீண்டும் தாக்கிய புயல்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கடந்த சில நாட்களுக்கு முன்பு 'காத்ரீனா' 'ரீட்டா' 'வில்மா'



என பல்வேறு பெயர்களில் புயல் தாக்கி பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. நூற்றுக்கணக்கானவர்கள் இதில் பலியானார்கள்.

இந்த சேதங்களில் இருந்து முழுமையாக மக்கள் விடுபடாத நிலையில் டென்னிசி மாநிலத்தை நேற்று முன்தினம் பலத்த சூறாவளி காற்று தாக்கியது. கடந்த 4 நாட்களுக்கு மேலாக தொடர்ந்து வீசிய இந்த சூறாவளி காற்றில் வீடுகள் இடிந்தும் மரங்கள் சாய்ந்து விழுந்தும் 28 பேர் பலியானார்கள்.

சுழன்று அடித்த சூறாவளிகாற்றில் நூற்றுக் கணக்கான வீடுகள் அடியோடு இடிந்து விழுந்தன. ஆயிரக்கணக் கான வீட்டின் கூரைகள் பறந்தன. மரங்கள் வேருடன் சாய்ந்தன. வீதிகளில் சென்றுகொண்டிருந்த கார்களையும் சூறாவளி காற்று தூக்கி வீசியது.

மின்சார கம்பங்கள் சரிந்து விழுந்ததில் நாஷவேலி, ஹென்டர்சன்வெலி, ஆஷ்லாந்து சிட்டி உட்பட பல்வேறு நகரங்கள் தொடர்ந்து இருளில் மூழ்கிக்கிடக்கின்றன. (க)

# காஷ்மீர் பிரச்சினைக்கு அமெ.அரசு மத்தியஸ்தம் வகிக்காதென அறிவிப்பு

காஷ்மீர் பிரச்சினைக்கு அமெரிக்கா நடுவர் கிடையாது என்று அமெரிக்க வெளியுறவு செயலர் கொண்டலிசா ரைஸ் தெரிவித்தார். வாஷிங்டன் நகரில் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற சர்வதேச உறவுக் குழுவில் கலந்துகொண்டு அமெரிக்க வெளியுறவு மந்திரி ரைஸ்பேசினார். அப்போது அவர் காஷ்மீர் பிரச்சின்னக்கான தீர்வு இந்தியா மற்றும் பாகிஸ்தானிடமே விடப்பட் டுள்ளது.

எனவே, இந்தியாவும் பாகிஸ்தானுமே காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகண்டு காஷ்மீர் பகுதியில் அமைதிக்கும் நன்மைக்குமான கதவுகளைத் திறக்க முன்வர வேண்டுமென்று தெரிவித்தார். மேலும் காஷ்மீர் விஷயத்தில் இரு நாடுகளும் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று அமெரிக்கா ஊக்கப்படுத்தியிருப்பதாகவும் ரைஸ் கூறினார். தொடர்ந்து அவர் கூறுகையில்,

காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா நடுவர் கிடையாது. அதற்குரிய பங்கையும் அது செய்யவில்லை. எனவே காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் விஷயத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் முயற்சி எடுப் பதே நல்லது என்று அமெரிக்கா நம்பியதிலிருந்து நடுவராகும் பணியை அமெரிக்கா கைவிட்டது. என்றும் கொண்டலிசாரைஸ்தெரிவித்தார்.(க-7)

WORLD NEWS உலக தரிசனம்



தைவான் அரசு அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஏ, ஏ. வி . ஏ -7 ரக ராணுவ டாங்கி வாகனத்தை வாங்கியுள்ளது. புதிய வாகன பயிற்சியில் தைவான் வீரர்கள்.

# தற்கொலைப்படை தாக்குதல்

## ஆப்கானிஸ்தானில் 3 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் மேற்கு பகுதியில் நேட்டோ பாதுகாப்புப் படையினர் முகாம் மீது நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலில்மூன்றுபேர்கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் இருந்த தலிபான்களை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு படை விரட்டியடித்தது. தற்போது அங்கு அதிபர் கர்சாய் தலைமையில் ஜனநாயக ஆட்சி நடந்துவருகிறது. இருப்பினும் தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக் குதல்



நடத்தி வருகின்றனர். இது நாள் வரை தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் தாக்குதல் நடத்தி வந்த இவர்கள் தற்போது ஆப்கானிஸ்தானின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளிலும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த 6ஆம் திகதி வடக்கு பகுதியில் குண்டூஸ் மாகாணத்தில் தங்கியிருந்த நேட்டோ படை வீரர்கள் மீது சைக்கிள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மூன்று அப்பாவி மக்கள் படுகாயமடைந்தனர். அதே நாளில் தலைநகர் காபூலின் வடக்கு பகுதியில் அமெரிக்க வீரர்கள் தங்கியிருக்கும் பகுதியில் உள்ள மார்க் கெட்டில் வெடிகுண்டு வெடித்தது.

இதில் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவர் இறந்தார். மூன்று பேர் படுகாயம் அடைந்தனர். கடந்த வெள்ளிக்கிழமை தென்பகுதியில் உள்ள ஹெல்மாண்ட் மாகாணத்தின் தலைநகரான லக்ஷர் கார் என்ற இடத்தில் தங்கியிருந்த அமெரிக்கப்படை வீரர்கள் மீது தற்கொலை படை வீரர் தாக்குதல் நடத்தியதில் மூன்று அமெரிக்கர்கள் காயமடைந்தனர். தற்கொலை படைவீரரும் இறந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இது போன்ற தாக்குதல் தொடர்ந்தது. ஆப்கானிஸ்தானில் மேற்கு பகுதியில் உள்ள ஹெராட் என்ற நகரில் நேட்டோ படை வீரர்கள் தங்கியுள்ளனர். இந்த முகாம் மீது காரில் வந்த தற்கொலை படைவீரர் ஒருவர் தாக்குதல் நடத்தினார். இதில் தற்கொலை படை வீரர் ஆப்கான் பாதுகாப்பு வீரர், பொலிஸார் ஆகியோர் இறந்தனர். ஏழுபேர் படுகாயமடைந்தனர். (க)

சிறு செயலைச் செய்வதற்கும் அலட்சியமாயிரா தீர்கள். நெருஞ்சி முள் தைத்தாலும் குனிந்து தான் அந்த முள்ளைப் பிடுங்க வேண்டும்.
-சுவாமி இராமதாசர்

வலம்புரி

## ஆயுதக் களைவை தனித்து ஜனாதிபதி செய்வாரா?

துணைப் படைகளிடம் உள்ள ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது செய்தியை நோர்வே சமாதானத் தூதுவர் மூலமாக ஜனாதிபதி விடுதலைப்புலிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்தவால் தெரியப்படுத்திய செய்தி சமாதானத்திற்கு வலுச்சேர்க்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

ஆனால் ஜனாதிபதி மகிந்த தான் கூறியதை நடைமுறையில் செயலாற்றுவாரா? என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.

துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைவதென்பது தனித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடையதல்ல.

மாறாக ஆயுதக் களைவில் படையினரின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமானதாகும்.

ஏனெனில், துணை ஆயுதக் குழுக்கள் அரச படைகளுடன் சேர்ந்தியங்குகின்றன என்ற குற்றச்சாட்டே முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆக, ஆயுதக் களைவில் படைத்தரப்பு ஒத்துழைப்பு தராதபோது அதனை முழுமையாக செய்ய முடியாது என்பதே உண்மை.

இலங்கை அரசியல் நிலைவரத்தைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரம் உடையவர் ஜனாதிபதியாகவிருந்த போதிலும் அவரின் உத்தரவுகளை நிறைவேற்றுவதில் படைத் தளபதிகள் பின்னடிப்பையே காட்டி வருகின்றனர்.

குறிப்பாக, உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து படையினர் வெளியேறி மக்கள் குடியமரும் விடயத்தில் படைத் தளபதிகளே தடையாவிருக்கின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தை விட்டுக் கொடுத்தால் புலிகள் அவ்விடங்களை எல்லாம் கைப்பற்றி விடுவார்கள். அதன் பின்னர் படையினரால் அவற்றை மீட்க முடியாது. அவ்வாறு மீட்கும் முயற்சியில் ஈடுபட்டால் அதற்காகப் படைத் தரப்பில் இருந்து அதிகமான உயிர்களைப் பலி கொடுக்க வேண்டிவரும்.

இவ்வாறு படைத் தளபதிகள் எச்சரிக்கை செய்ய, அதற்கு ஜனாதிபதி மௌனமாகி விடுவதே வழமை. இந்த வழமை துணை ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதிலும் மேலோங்கவே செய்யும்.

அதாவது, துணைக் குழுக்களில் இருந்து ஆயுதக் களைவைச் செய்தால் அது படைத் தரப்பின் பலத்தைக் குறைக்கும். அதனால் விடுதலைப்புலிகள் வலிமை பெறுவர். இது நாட்டின் இறைமைக்கும் ஒற்றையாட்சிக்கும் பாதகமாக அமையும்.

இவ்வாறு படைத்தளபதிகள் கூற ஜனாதிபதி மகிந்த மௌனமாகிப் போவார். எனவே துணைக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையும் விடயத்தில் ஜனாதிபதியுடன் முப்படைத்தளபதிகளும் உறுதி எடுப்பதும் அதனைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும்.

இல்லையேல் தனித்து மகிந்தவால் ஆயுதக் களைவை செய்ய முடியாது என்பதே உண்மை.

# இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போதும் ஆயுதக் குழுக்கள் பற்றியே ஆராயப்படும்

(கொழும்பு)

ஜெனீவாவில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் தற்போது நிலவும் பதற்றகரமான சூழ்நிலை குறித்தே ஆராயப்படுமென்றும் உயர் பாதுகாப்பு வலயம் குறித்த பிரச்சினை இந்த பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு வகிக்காதென்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வேயின் அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம், லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்த போதும், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் ஹன்சன் போவர் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை சந்தித்த போதும் புலிகள் தரப்பு இதனையே வலியுறுத்தியிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெனீவாவில் இடம்பெற்ற முதல் சுற்றுப் பேச்சின் போது ஆயுதக் குழுக்கள் குறித்து விவாதிக்கப்பட்டதால் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் உயர்பாதுகாப்பு வலயம் குறித்தே பேசுவதென இரு தரப்பும் இணக்கம் கண்டன.

ஆனால் முதல்கட்ட பேச்சின் போது காணப்பட்ட இணக்கப்பாடுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாதன் விளைவாக ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதன் காரணமாகவும் இரண்டாம் கட்ட பேச்சின் போது இது குறித்து மீண்டும் ஆராய்ந்து தீர்க்கமான முடிவொன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருப்பதாகவும் தமது இந்த நிலைப்பாட்டை நோர்வே ஊடாக அரசுக்கு புலிகள் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் இந்தசெய்தி அரசுக்கு தெரியப்படுத்தப்பட்டு இரண்டாம் கட்ட பேச்சின் போது ஆயுதக் குழுக்களின் விவகாரமே ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் திடமான பதிலைப் பெற்றுக்கொண்ட பின்னரே உயர் பாதுகாப்பு வலயம் குறித்த பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் செல்வர் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை, ஜெனீவா இணக்கப்பாட்டிற்கு பின்னர் வடக்கு-கிழக்கு பகுதிகளில் நிலவும் பதற்றநிலை குறித்தும் அதற்கு காரணமான தரப்பினர் குறித்தும் கண்காணிப்புக்குழுவின் இரண்டாம் கட்டப் பேச்சின்போது இரு தரப்பினருக்கும் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# புலிகளை விடுதலைக்கான அமைப்பென கூறமுடியாது என்கிறது ஹெல உறுமய

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலைக்கான சுதந்திர அமைப்பு என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கூறியிருப்பது நாட்டின் இறைமைக்கு சவாலாக அமைந்து விட்டது என்று ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் கலவல்கல சந்தாலோக தேரர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

பயங்கரவாத புலிகள் அமைப்பை விடுதலைக்கான சுதந்திர அமைப்பென்று கூறுவதற்கு நோர்வேக்கு எவ்வித மான அருகதையும் இல்லை. நாம் கூறிவருவதைப் போல நோர்வே பக்கச்சார்பாக நடந்துகொள்ளும் "வெள்ளைப் புலி" என்பது நிரூபணமாகின்றது.

சமாதான முன்னெடுப்பில் மத்தியஸ்தம் வகிப்பதாக் கூறும் நோர்வே விடுதலைப்புலிகளுக்கு சார்பாக நடந்து கொள்கின்றது.

இதன் பிரகாரம் இலங்கையை இரண்டாகப்பிரித்து ஒரு பகுதியை வன்னிப்புலிகளுக்கு வழங்குவதற்கு தேவையான அடித்தளமிட்டுவருகின்றது.

அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய சங்கம் , கனடா உட்பட இந்தியா போன்ற நாடுகள் புலிகள் அமைப்பை பயங்கர வாத பட்டியலுக்குள் உட்படுத்தியிருக்கின்ற போது நோர்வே புலிகள் அமைப்பை விடுதலைக்கான சுதந்திர அமைப்பு என்று கூறுவது இலங்கையின் இறைமைக்கு பங்கம் ஏற்படுத்தும் செயலாகும் .

தமிழீழம் உருவாகுவதற்கு அடித்தளம் இட்ட நோர்வேயை இந் நாட்டிலிருந்து விரட்டும் வரை எமது இறைமைக்கு பாதிப்பு ஏற்படும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் கிடையாது. எரிக்சொல்ஹெய்மின் அடியை பின்பற்றியே ஜோன் ஹன்சன் போவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நோர்வேயின்மூலமாக எமதுநாட்டிற்கு ஏற்படப்போகும் விளைவுகள் குறித்து நாம் பலமுறை தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் விளங்கிக்கொள்ளவேண்டும். நோர்வேயின் தூதரக உறவுகளை விடவும் இலங்கையின் இறைமை முக்கியமானது என்பதால் நோர்வேயின் சமாதான முன்னெடுப்பை உடனடியாக விலக்கிக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (க)

## கலை இலக்கியப் பெருவிழா

(நல்லூர்)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப்பெருவிழா இன்றும் நாளையும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல் நாள் விழா இன்று பி.ப 2.30மணிக்கு பிரதேச செயலர் தி.திருவாகரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாண திட்டப்பணிப்பாளர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், யாழ். பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறை விரிவுரையாளர் கலாநிதி கலைவாணி இராமநாதனும் கலந்துகொள்வார்கள் .

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை உதவிப் பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷும், சிறப்புவிருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முகாமை கற்கைகள் வணிக பீட பீடாதிபதி க.தேவராசாவும் , வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (க-134)

## அரசியல் அமைப்பு பேரவைக்கு அங்கத்தவர்களை நியமியுங்கள்!

### ஜனாதிபதி சபாநாயகருக்கு அவசர வேண்டுகோள்

அரசியலமைப்பு பேரவைக்கு அங்கத்தவர்களைத் தாமதமின்றி நியமிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டாரவிற்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி சபாநாயகருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அரச சேவையை சீராக நடத்துவதற்கு அரசியலமைப்புப் பேரவை முக்கியமானது என்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, அரச சேவைகள் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாததால் அரசநிர்வாக நடைமுறை பாதிக்கப்பட்டுள்ளதெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பொது மக்களுக்கு சேவைகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் நடைமுறையில் சுயாதீன ஆணைக் குழுக்களின் செயற்பாடுகள் முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. எனவே, அவற்றின் அங்கத்தவர்களை நியமிப்பது அத்தியாவசிய விடமென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அர்த்தமுள்ள நடவடிக்கைகளின் மூலம் நிர்வாகச் செயற்பாடுகளை முட்டுக்கட்டையின்றி முன்னெடுத்துச் செல்வதே எனது நோக்கம். எனவே, அரசியலமைப்புப் பேரவைக்குத் தேவையான அங்கத்தவர்களை துரிதமாக நியமிக்க நடவடிக்கையெடுக்கவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் கேட்டுள்ளார். (க-7)

சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்



பத்தாம் திருவிழா~ தேர்த்திருவிழா

தேரேறி வருகின்ற ஐயனே —உந்தன்
திருப்பாத மலர் எங்கள் சரணமே
உயர்வானநிலை சேர்க்கும் ஐயனே — என்றும்
சாமியே சரணம் எங்கள் வேதமே
தேரேறி....
மருதம் தென்றல் தாலாட்டும் சுன்னை
நகர் தன்னில்— ஐயன்
நீ வந்து அமர்ந்தாயே எமை காக்கவே
துலங்காமல் இருள் சூழ்ந்த பல வீட்டிலே — நீ
ஒளி தீபம் வளர்த்தாயே அருள் தெய்வமே
தேரேறி....
ஆகாயம் தீ காற்று நிலம் நீரெல்லாம் — இங்கு
நீயாக — கண்டோமே ஸ்ரீ ஹரிகரா
உன் தஞ்சம் அடைந்தோரின் புவி வாழ்வெல்லாம் — மிக
உயர்வோடும் அடைந்தாரே மன நிம்மதி
தேரேறி....
பார்த்தாலே பசிதீரும் முகவல்லவா — இந்த
பார் போற்றும் ஒரு தெய்வம் நீயல்லா
அறியாமல் இருந்தோம் உன் அருளல்லவா — இன்று
அறிந்தோமே இனி இல்லை துயரல்லவா
தேரேறி...
தேர் கொண்டு ஊர்கோலம் நாம்செய்கிறோம் — இங்கு
தினம் தோறும் துதிப்பாடி மணம் பூக்கிறோம்
ஊரெங்கும் ஒன்றாகி வடம் ஏந்துவோம் — இந்த
நாடெங்கும் நலம் காண உனை வேண்டினோம்
தேரேறி...

ஆக்கம்-ஐயப்ப அடியவர்

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



வாழ்க்கையிலிருந்து விலகி ஓடாமல் வாழ வேண்டிய முறையை அறிந்து அதன்படி வாழ்ந்தால் அதுவே ஓர் ஆன்மீகச் சாதனையாகிவிடுகிறது. ஒளியை அடைவதற்கான இறையனுமதிக்கான ஒரு வழியாகி வீடுகிறது. உரிய முறையில் வாழ்வது என்பதை இரண்டு படிகளாக இரண்டு மந்திரங்கள் கூறுகின்றன.

# சி.சு. கட்சியின் தேசிய மாநாடு சட்டதிட்டங்களுக்கு முரணானது

## கட்சியின் தலைவி சந்திரிகா கண்டனம்



(கொழும்பு)

கட்சியின் தலைவர்இல்லாத நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு நடத்தப்பட்டமை கட்சியன் சட்டதிட்டங்களுக்கு முரணானது. இவ்வாறு கட்சியின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இம் மாநாடு நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக முன்னாள் ஜனாதிபதி லண்டனில் இருந்தவாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.கட்சியின் தீர்மானங்களை எடுப்பதற்கு அதன் தலைவி என்ற வகையில் தனது தலைமையில் நிறைவேற்றுக் குழு, மத்திய குழு என்பன கூட்டப்பட வேண்டும் எனவும் ஏப்ரல் மாத இறுதியில் நாடு திரும்பியவுடன் மே மாதம் முதல் கட்சியின் நிறைவேற்றுக்குழு மற்றும் மத்திய குழுவிற்கான கூட்டம் ஒன்றை கூட்டவுள்ளதாகவும் அக்கடிதத்தில் சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

45 வருட காலமாக கட்சியினால் கடைப்பிடிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு முரணாக இம் மாநாடு நடத்தப்படுவதனால் அதனை இடைநிறுத்துமாறும் அவர் கேட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இக் கடிதம் மைத்திரிபால சிறி சேனவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கிடைத்துள்ள போதிலும் அக் கடிதத்தைப் பொருட்படுத்தாது கடந்த வெள்ளிக்கிழமை கட்சியின் தேசிய மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றுள்ளது.

இம் மாநாட்டில் கட்சியின் பதில் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமிக் கப்பட்டார். இதேவேளை கட்சியின் தலைவி சந்திரிகா குமாரதுங்க லண்டன் புறப்படுவ தற்கு முன்னர் பதில் தலைவராக பிரதமர் ரட்ண சிறி விக்கி ரமநாயக்காவை நியமித்திருந்தார்.

நிலைமை இவ்வாறாகவிருக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் ரண்ட சிறி விக்கிரமநாயக்காவே முன்மொழிந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ரணில் அமெரிக்கா செல்வார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இம்மாத இறுதியில் அமெரிக்கா செல்லவுள்ளார். அண்மையில் நோர் வே மற்றும் இந்தியப் பயணம் மேற்கொண்டிருந்த அவர் அமைதி முயற்சிகள் தொடர்பாக அந் நாட்டுத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

ரணிலின் இந்தப் பயணங்களின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் தென்னிலங்கையின் ஒருமித்த கருத்து உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந் நாடுகள் வலியுறுத்தியிருந்தன. ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துதேசிய அரசாங்கத்தை அமைக்க மகிந்த ராஜபக்ஷவுக்கு இவ்விரு நாடுகளும் அழுத்தம் கொடுப்பதாகவும் கூறப்பட்டது.

இந் நிலையில் ரணிலின் அமெரிக்கப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ந-4,5)

## மாமனிதர் விக்னேஸ்வரனுக்கு தமிழீழத் தேசியக்கொடி போர்த்தி இறுதி அஞ்சலி

(திருகோணமலை)

மாமனிதர் விக்னேஸ்வரினின் புகழுடலுக்குத் திருகோண்மலைக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தமிழீழத் தேசியக் கொடியினைப் போர்த்தி இறுதி வணக்கம் செலுத்தினார்.

மாமனிதரின் புகழுடல் நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியிலுள்ள சம்பூருக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் எவோ ஜோன்சன் மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஏனைய மாவட்ட உறுப்பினர்களும் உடன் சென்றனர்.

சேனையூர் மத்திய கல்லூரியில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் புவன இரத்தினசிங்கம் தலைமையில் நினைவு வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் பொதுச் சுடரினை ஏற்றினார். திருமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தமிழீழத் தேசியக் கொடியினைப் போர்த்தி மலர் மாலை அணிவித்தார்.

பயிற்சி கல்லூரிப் பொறுப்பாளர் கீரன், மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், மகளிர் பேரவைத் தலைவி கண்மணி வடிவேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரைரட்ணசிங்கம், சிவாஜிலிங்கம் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணிக்கு வவுனியா நோக்கி புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டது. இன்று கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப் படும்.

(ந-4,5)

## நோர்வே வெளியேறினால்...

சினையில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரிடையே அவநம்பிக்கையுள்ள நிலையில் மூன்றாம் தரப்பு அனுசரணை அவசியமானது.

நோர்வே தரப்பினரது பாரபட்சமற்ற,நடுநிலையான,அமைதியை உருவாக்கிற அர்ப்பணிப்பு தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஜே.வி.பியினரை மகிழ்விப்பதற்காக ஜெனீவாப் பேச்சுக்களின் யுத்த நிறுத்த ஒப்பந்த திருத்தத்தை அரசாங்கக்குழு முன்வைத்தால் அதை நாங்கள் நிராகரிப்போம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பிலான விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு தெளிவாகவுள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திருத்தவேண்டிய தேவையெதுவும் இல்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதுதான் அவசியம் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

(கு)

## கடற்படையின் கப்பலிலேயே...

இது தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்வ் கென்றிஸனுக்கு தமிழ்ச் செல்வன் நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதன் விபரம் வருமாறு,

எமது கிழக்குப் பிராந்திய தளபதிகளது போக்குவரத்து நடைமுறைகள் தொடர்பாக அரசு விடுத்த அறிவிப்பு எமது தலைமைப் பீடத்தை மிகவும் ஆத்திரத்திற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

நான்கு வருடங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டு வந்த நடைமுறைகள் எமது யோசனைகள் அனைத்தையும் நிராகரித்து எவ்விதத்திலும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற இவ் அறிவிப்பானது எவ்விதத்திலும் அமைதி முயற்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் என நாம் நம்பவில்லை.

அடுத்த கட்ட ஜெனீவாப் பேச்சுக்களுக்கு செல்ல முன்னர் எமது தளபதிகள் எமது தலைமைப் பீடத்துடன் கலந்துரையாட வேண்டிய அவசியம் உள்ளது. இதனாலேயே நாம் எமது தளபதிகளுக்கான பயண ஒழுங்கினைச் செய்து தரும்படி கேட்டிருந்தோம்.

யுத்தநிறுத்தம் அமுலாக்கப்பட்டதில் இருந்து எமது தளபதிகள் திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்குச் சென்று வருவதற்கு வான்வழிப்போக்குவரத்தே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அண்மையில் அரசாங்கத்தினதும் படைத்துறையினதும் கடும் போக்குகாரணமாக திட்டமிடப்பட்டு வான்வழிப்போக்குவரத்து மறுக்கப்பட்டமையினாலேயே நாம் கடல் வழிப்போக்குவரத்தினை கேட்டிருந்தோம். எம்மிடம் மிக வலுவான கடற்படை ஒன்று உள்ளது.

முன்னைய தடவைகளில் எமது போராளிகள் கடல் வழிப்பயணங்ளை மேற்கொண்ட போது எமது கடற்படைக் கப்பல்களையே பயன்படுத்தி இருந்தோம் என்பதை தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

ஆயினும் இம் முறை அரச கடற்படையின் கப்பலில் நாம் பயணிக்கவேண்டும் என்பதை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. அதில் பயணிப்பதற்கு எமது தளபதிகளும் போராளிகளும் தயாராக இல்லை என்பதையும் தங்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மேலும் ஜெனீவாவில் கடந்த மாதம் நடைபெற்ற பேச்சுக்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி யுத்தநிறுத்த உடன்படிக்கையினை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இது அவர்கள் யுத்த நிறுத்தத்தினை நடைமுறைப்படுத்துவதில் அவர்களுக்கு இருக்கின்ற அசிரத்தையினை சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வம் இன்மையினை தெளிவாகக் காட்டுகின்றது.

எனவே எமது முன்னைய முறைகளில் கடைப்பிடிக்கப்பட்டது போன்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் எமது கப்பல்களில் எமது தளபதிகள் பயணம் செய்வதற்கு உரிய ஒழுங்கினை விரைவாகச் செய்து தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே மாறாக இக்கோரிக்கை இழுத்தடிக்கப்பட்டு நிராகரிக்கப்படுமாக இருந்தால் முன்னரைப்போன்று எமது சொந்த முறையினைப் பயன்படுத்தி எமது பயணத்தினை மேற்கொள்வோம் என்பதை தங்களுக்கு தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

இப் பயணத்தினை வழிமறித்து இடையூறுசெய்ய இலங்கைக் கடற்படை எத்தனிக்குமாக இருந்தால் அது பாரிய யுத்தநிறுத்த மீறலாகவே அமையும். அத்துடன் அவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால் எதிர் காலத்தில் இலங்கை கடற்படைக்கும் அதேநிலைமைதான் ஏற்படும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நிலைமை யுத்தநிறுத்த முறிவுக்கே இட்டுச்செல்லும் எனவும் நாம் அஞ்சுகின்றோம். ஆகவே எமது தளபதிகளின் பயண ஒழுங்கினை விரைவாக ஏற்படுத்தித்தரும் படி பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ந-4,5)

## முதன்மைப் பெயர்கள் இன்று வெளிவரும்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த 266 உள்ளூராட்சி மன்றங்களுக்கான முதன்மைப் பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளவர்களின் பெயர்கள் இன்று வெளியிடப்படும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

மாநகர சபை முதல்வர்கள், பிரதி முதல்வர்கள், நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கான தலைவர்கள், பதில் தலைவர் கள் ஆகியோரின் பெயர்கள் இன்று வர்த்த மானி மூலம் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கிழக்கை...

அமைப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பல அரசியல் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. கிழக்கை தனியாகப் பிரிப்பது தொடர்பாக பிரதேச மக்களிடையே கருத்து ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென அவ் இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

(ந-5)


10.04.2006 முதல்
அர்ஜுன், மீனா, ஜோதிகா, மணிவண்ணன் நடித்த
ரிதம்
சினிமா
புதுவருடத்தை முன்னிட்டு
14.04.2006
கள்வனின் காதலன்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

பிரபு முரளி நடித்த
பாசக்கிளிகள்
சங்கானை கா.நே. 11.00, 2.45,6.00 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.